விலை ரூபா: 10.00
Registered as a Newspaper in Srilanka
# வலம்புரி
Valampurii
பக்கங்கள்: பன்னிரண்டு
சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 26 ஞாயிற்றுக்கிழமை (09.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 111

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற்சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# விக்னேஸ்வரனுக்கு மாமனிதர் விருது



(கிளிநொச்சி)

சிறிலங்கா இராணுவப் புலனாய்வுப் பிரிவினரால் படுகொலை செய்யப்பட்ட திருமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வ.விக்னேஸ்வரனுக்கு தமிழீழத்தின் அதியுயர் தேசிய விருதான மாமனிதர் விருதினை தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் வழங்கிச் சிறப்பித்துள்ளார்.

இது தொடர்பில் தமிழீழத் தேசியத் தலைவர் வே.பிரபாகரன் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார். அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டதாவது,

தாயகவிடுதலையை தனது வாழ்வின் அதியுயர் இலட்சியமாக வரித்து அந்த உயரிய இலட்சியத்திற்காக அயராது உழைத்த உன்னத மனிதரை தமிழீழத் தேசம் இன்று இழந்துவிட்டது.

எமது தாயகத்தின் தலைநகரில் விடுதலைக்காக ஒளிர்ந்த ஒரு சுதந்திரச் சுடர் இன்று அணைந்து விட்டது. தமிழர் தேசியத்தின் ஒற்றுமைக்காகவும் ஒருமைப்பாட்டிற்காகவும் ஓயாது ஒலித்த ஒரு பெரும் குரல் இன்று ஒடுங்கிவிட்டது.

தமிழ்த் தேசியத்தின் எழுச்சிக்கும் வளர்ச்சிக்கும் முதுகெலும்பாக நின்று முனைப்புடன் செயற்பட்ட ஒரு தமிழினப் பற்றாளர் எதிரியின் கோரமான தாக்குதலுக்குப் பலியாகி விட்டார்.

இந்த உன்னத மனிதரை இழந்து இன்று எமது தேசம் ஆறாத்துயரில் மூழ்கிக் கிடக்கின்றது. விக்னேஸ்வரன் அவர்கள் ஒரு அற்புதமான மனிதர். உயர்ந்த குணவியல்புகள் கொண்டவர். அனைவரையும் கவர்ந்து கொள்ளும் ஆளுமை படைத்தவர். தமிழ் மக்களால் பெரிதும் போற்றப்பட்ட ஒரு தேசப் பற்றாளர். அவரது இழப்புத் தமிழர் தேசத்திற்கு என்றுமே ஈடுசெய்ய முடியாத ஓர் பேரிழப்பு.

தமிழீழத் தனியரசே தமிழரின் தேசியப் பிரச்சினைக்கு இறுதியான உறுதியான தீர்வு என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டவர். தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தையும் அதன் இலட்சியத்தையும் முழுமையாக முழு மனதுடன் ஏற்று தமிழீழ விடுதலை



போராட்டத்திற்கு பல்வேறு வழிகளிலும் பங்களிப்புச் செய்தார்.

சிங்களப் பேரினவாதிகளின் கெடுபிடிச் செயல்கள் (12 ஆம் பக்கம் பார்க்க)

# சிறுப்பிட்டியில் கிளைமோர்
# இராணுவ வாகனம் சிக்கியது

## சிப்பாய் உட்பட இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

சிறுப்பிட்டியில் நேற்று மாலை 4.40 மணியளவில் இராணுவ வாகனத்தை இலக்குவைத்து மேற்கொள்ளப்பட்ட கிளைமோர்த்தாக்குதலில் சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். வாகனமும் சேதத்திற்குள்ளானது.

இத்தாக்குதலின்போது வீதியால் சென்ற முதியவர் ஒருவர் படுகாயமடைந்தார். இத்தாக்குதலையடுத்து அவ் வீதியூடாகச் சென்றவர்கள் மீது இராணுவத்தினர் தாக்குதலை மேற்கொண்டனர். இதன்போது மூவர் படுகாயமடைந் தனர். (12 ஆம் பக்கம் பார்க்க)

## விக்னேஸ்வரனின் பூதவுடல் அஞ்சலிக்காக நாளை கிளிநொச்சிக்கு எடுத்துவரப்படும்

(திருகோணமலை)

இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்ட திருகோணமலை தமிழ்மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரனின் பூதவுடல் இறுதி அஞ்சலிக்காக நாளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டு செல்லப்படவுள்ளது.

அவரது பூதவுடல் நேற்று பொதுமக்களின் அஞ்சலிக்கென திருகோணமலை நகரில் இருந்து 3 கிலோமீற்றர் தூரத்திற்கு அப்பால் உள்ளதான அன்புவழிபுரம் பகுதியில் உள்ள அவரது இல்லத்தில் தற்போது வைக்கப்பட்டுள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர்களான துரைரட்ணசிங்கம், சிவாஜிலிங்கம், விநோராதலிங்கம் ஆகியோர் உட்பட பொதுமக்களும் அவரது பூதவுடலுக்கு தமது இறுதி அஞ்சலியினை செலுத்தினர்.

இந் நிலையில் மக்கள் அஞ்சலிக்காக நாளை விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டுப் பகுதிக்கு கொண்டுவரப்படவுள்ளது. அங்கு விடுதலைப்புலிகளின் அரசியல்துறைச் செயலகத்திலும் அஞ்சலிக்காக வைக்கப்படவுள்ளது. (12 ஆம் பக்கம் பார்க்க)

## ரணில்–மகிந்த விரைவில் சந்திப்பு

(கொழும்பு)

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண்பது தொடர்பாக ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்கவை ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ விரைவில் சந்தித்துப் பேசவுள்ளார். இச் சந்திப்பை மேற்கொள்வதற்கு நேரம் ஒதுக்குமாறு ஜனாதிபதி கேட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

ரணில் மற்றும் மகிந்த ராஜபக்ஷ இணைந்து செயற்பட (12 ஆம் பக்கம் பார்க்க)

## திருமலையில் நேரடி மோதல்

(திருகோணமலை)

திருகோணலையில் விடுதலைப்புலிகளுக்கும் இராணுவத்தினருக்கும் இடையே நேற்று பிற்பகல் 2மணியளவில் இடம்பெற்ற நேரடி மோதலில் ஒரு போராளி வீரச்சாவடைந்துள்ளார்.

இராணுவத்தரப்பில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் மேலும் நால்வர் காயமடைந்தனர். மூதூர் தோப்புப் பகுதியில் உள்ள தட்டியடி விடுதலைப்புலிகளின் அரண்நோக்கி முன்னேறிவந்த இராணுவத்தினர் தாக்குதல் நடத்தியுள்ளனர்.

இதன்போது ஒரு போராளி வீரச்சாவடைந்தார். இதனையடுத்து விடுதலைப்புலிகள் பதில் தாக்குதல் நடத்தியதில் ஒரு சிப்பாய் கொல்லப்பட்டதுடன் நான்கு இராணுவத்தினர் படுகாயமடைந்ததாக விடுதலைப்புலிகள் தரப்பு செய்திகள் தெரிவித்தன.

இரு தரப்புக்குமிடையேயும் சுமார் இரு மணிநேரம் நேரடி (12 ஆம் பக்கம் பார்க்க)

## இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் நாளை கிளி.க்கு

(கிளிநொச்சி)

இலங்கைக்கு உதவி வழங்கும் இணைத்தலைமை நாடுகளின் தூதுவர்கள் நாளை கிளிநொச்சி செல்கின்றனர். கிளிநொச்சி சமாதானச் செயலகத்தில் விடுதலைப்புலிகளின் அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வனை இவர்கள் சந்தித்துப் பேசவுள்ளனர்.

நோர்வே, ஐரோப்பிய ஒன்றியம் சார்பில் நெதர்லாந்து மற்றும் (12 ஆம் பக்கம் பார்க்க)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.




இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## அனைத்துலக மனித உரிமைகள் பிரகடனம்

**உறுப்புரை - 23**

3. வேலை செய்யும் ஒவ்வொருவரும் தாமும் தமது குடும்பத்தினரும் மனித மதிப்புக்கியையபான ஒரு வாழ்க்கையை நடத்துவதனை உறுதிப்படுத்தும் நீதியானதும் அனுகூலமானதுமான ஊதியத்திற்கு உரிமையுடையோராவர். அவசியமாயின் இவ்வூதியம் பிற சமூகப் பாதுகாப்பு வழிமுறைகளினால் குறை நிரப்பப்படுவதாயிருத்தல் வேண்டும்.
4. ஒவ்வொருவருக்கும் தத்தம் நலன்களை பாதுகாப்பதற்கெனத் தொழிற்சங்கங்களை அமைப்பதற்கும், அவற்றில் சேர்வதற்குமான உரிமையுண்டு.

# கண்ணாம்பூச்சி விளையாட்டும் கை நழுவும் சமாதானமும்



ஜெனீவாவில் அரசாங்கத்திற்கும் புலிகளுக்குமிடையே போர் நிறுத்த உடன்படிக்கையை முறையாக அமுல்படுத்துவது தொடர்பில் இடம்பெற்ற பேச்சுக்களின் பின்பு உருவான அமைதிச்சூழல் குலைந்து தற்போது மீண்டும் வன்முறைகள் அதிகரித்துள்ளன. சில வாரங்களுக்கு முன்பு சிறிது சிறிதாக ஆரம்பித்த வன்முறைகள் தற்போது மிக மோசமான நிலையை அடைந்துள்ளமையை காணக்கூடியதாகவுள்ளது.

குறிப்பாக கிழக்கில் விடுதலைப்புலிகளின் முன்னரங்க காவல் நிலையங்களின் மீது ஒட்டுப்படைகளின் தாக்குதல்கள் பல தடவைகள் இடம்பெற்றுள்ளன. இந்த தாக்குதல்களின் பின்னால் இராணுவமே இருப்பதாக பரவலாக கருதப்படுகிறது. இத்தகைய தாக்குதல்கள் ஏதாவது ஒரு இராணுவ முகாமுக்கு அண்மையில் இடம் பெறுவதும், தாக்குகின்றவர்கள் இராணுவ முகாம் பக்கமாக தப்பிச்செல்வதாக கூறப்படுவதும் இவ்வாறான கருத்துக்கள் உருவாக காரணமாக இருக்கலாம்.

எவ்வாறெனினும், ஜெனீவாவில் உறுதியளித்தபடி ஒட்டுப்படைகளின் செயற்பாட்டை நிறுத்துவது தொடர்பில் அரசாங்கம் கவனம் செலுத்தவில்லை என்றே தோன்றுகிறது. இன்னொருபுறம் இவ்வாறு அரசாங்கம் அலட்சியமாக இருப்பதன் பின்னணி குறித்து பல்வேறு ஊகங்கள் எழ ஆரம்பித்துள்ளன.

இந்த ஊகங்களில் வழமைபோல அரசாங்கம் யுத்தத்தை எதிர்கொள்ள தயாராகிறது, எனவேதான் அது தனது பொறுப்பினை தட்டிக்கழிக்கிறது என்ற கருத்தும் உள்ளது. அதனை ஒருபுறம் வைத்துவிட்டு பார்த்தால் வேறுசில கருத்துக்களும் முன்நிற்கவே செய்கின்றன.

**- என். ஜீவேந்திரன்**

அதில் முக்கியமான ஒன்றாக, அரசாங்கமானது கிழக்கில் விடுதலைப்புலிகளின் கட்டுப்பாட்டு பிரதேசத்தில் கருணா குழு ஒரு தனிப்படையாக இயங்குவதாக காட்ட முயற்சிப்பதாகவும், அதன்மூலம் இது குறித்து நடவடிக்கை எடுக்கின்ற பொறுப்பு தமக்கு இல்லை என காட்ட முயற்சிப்பதாகவும் ஊகங்கள் உள்ளன.

எனினும், இது சிறுபிள்ளைத்தனமான விளையாட்டாக பலராலும் கருதப்படுகிறது. மேலும், இதன் பிரதி பலனாக படைகள் மீது புலிகள் தாக்குதலை தொடுத்துவிட்டு இதற்கும் தமக்கும் சம்பந்தமில்லை



என கூறக்கூடிய வாய்ப்பும் உள்ளமை இங்கு கவனிக்கத்தக்கதாகும். கடந்த டிசம்பர் மாதம் பரவலாக அரச படைகள் மீது இவ்வாறு பல தாக்குதல்கள் இடம்பெற்று நூற்றுக்கும் அதிகமான படையினர் கொல்லப்பட்டமை இங்கு அவதானிக்கத்தக்கதாகும். சில நாட்களுக்கு முன்பு மன்னார் கடலில் இடம்பெற்ற சம்பவமும் இதன் தொடர்ச்சியானதாக இருக்கக்கூடும் என்றும் கருதப்படுகிறது.

எனவே அரசாங்கமானது நாட்டு மக்களது எதிர்காலத்திற்கு பொறுப்புச்சொல்ல வேண்டிய தமது கடமையை உணர்ந்து இவ்வாறான கண்ணாம்பூச்சி விளையாட்டுக்களை கைவிட்டு உண்மையான சமாதானத்துக்காக உருப்படியான நடவடிக்கைகளில் இறங்க வேண்டியது அவசியமாகும்.

## தொல்லியந் சான்றுகள்

பண்டைய வரலாற்றை சிறந்த முறையில் ஆராய்ந்து அறிவதற்கு உதவும் சான்றுகள், இலக்கியம், அகழ்வாராய்ச்சி, தொல்பொருட்கள், வெளிநாட்டார் குறிப்புகள், கல்வெட்டுகள் (சாசனங்கள்) என்பனவாகும். கல்வெட்டு என்றும் சாசனம் என்றும் குறிக்கப்படுபவை: கருங்கல்,

### கண்டது.. கேட்டது.. படித்தது..

மக்கிக்கல், செங்கல், முருகைக்கல், உலோகத்தகடு, மட்பாண்டம், மரப்பட்டை, ஓலை, துணி, தோல் என்பவைகளில் பொறிக்கப்பட்ட வரலாற்றைக் குறிக்கும் மூலாதாரங்களாகும். எமது மூதாதையர் கல்லை செப்பனிட்டு எழுதும் கலையில் வல்லவர்களாக இருந்தனர். பண்டைக்காலத்தில் நடுகல் நாட்டும் வழக்கம் இருந்தது. கல்வெட்டிலே பொறிக்கப்பட வேண்டிய செய்தியை அரண்மனையைச் சேர்ந்த சாசனோ அறிஞரோ வாசகமாக அமைத்துக் கொடுப்பது வழக்கம். அதை சிற்பாசாரியர் கருங்கல்லில் பொறிப்பர்.

இலங்கையில் கி. மு மூன்றாம் நூற்றாண்டு தொடக்கம் தொடர்ச்சியாக சாஸனங்கள் கிடைத்துள்ளன. சோழ மன்னனால் பொலனறுவை இராச்சியம் அழிக்கப்பட்டது உண்மை என்பதும் புலனாகியது. இக்கல்வெட்டுகளினால் ஊறு காவற்றுறையில் கண்டெடுக்கப்பட்ட கல்வெட்டில், சோழ மன்னனின் தளபதி இங்கிருந்த மன்னனையும், பெண்டிர், பண்டாரம் யாவரையும் பிடித்துச்சென்று இலங்கையையும் திறை நாடாக்கிச் சென்றான் என்று காணப்படுகிறது. சூள வம்சத்தில் (குலவம்சம்) 5வது மகிந்த மன்னன் சோழ நாட்டிற்கு கைதியாக கொண்டு செல்லப்பட்டானென்று காணப்படும் செய்தி உண்மை என்பதும் இச்சாசனத்தால் உறுதியாகியது.

பொலனறுவையில் உள்ள 'வேளைக்கார சாசனம்' பழமோட்டையில் உள்ள தமிழ்ச்சாசனம், ஆகியவை விஜயபாகு மன்னன், புத்த தந்தத்திற்கு காவலாக தமிழ் படைகளை வைத்திருந்தான் என்றும் தமிழ் இலிகிதர்களை ஆதரித்தான் என்றும் தெளிவாக சொல்லப்பட்டுள்ளது. இதனால் சூள வம்சத்தில் கூறப்பட்டுள்ள ஒரு செய்தி பிழையானது என்பது தெளிவுபடுத்தப்பட்டுள்ளது: விஜயபாகு சோழர்களை வென்ற பொழுது இலங்கையில் இருந்த அனைத்து தமிழர்களையும் அழித்து பொலனறுவைக்குள் நுழைந்தான் என்று கூறுகிறது.

இலங்கையின் பழைய வரலாற்று நூல்களான மகாவம்சம், தீபவம்சம், குளவம்சம் (குல வம்சம்) ஆகியவை இலங்கையில் ஆரம்பத்தில் இருந்து ஒரு பெரிய அரசவம்சமும், ஒரு பெரிய இராச்சியமுமே இருந்தன என்று கூறுகின்றன. ஆனால் சாசனங்களை ஆராயுமிடத்து ஆரம்பத்திலே வட இலங்கையில் கூட பல தமிழ் சிற்றரசுகள் இருந்துள்ளன என்பதையும் பல அரசர்கள் ஆங்காங்கே ஆட்சி நடத்தினர் என்பதையும், பிற்காலத்திலேதான் எல்லாவற்றையும் உள்ளடக்கிய தனி இராச்சியமாக 'அநுராதபுர இராச்சியம்' தோன்றியது என்றும் இவைகள் மூலம் அறிந்து கொள்கிறோம்.

'தேவநம்பிய' என்ற விருது 'திஸ்ஸ' என்ற மன்னனுக்கு மட்டுமல்ல பின்னிருந்த பல மன்னருக்கும் இவ்விருது இருந்துள்ளது என்று கல்வெட்டுகள் மூலம் தெரியவருகிறது.

கதிர்.தணிகாசலம் எழுதிய தமிழ் : மொழியின் மாட்சியும் பரந்த பண்பாடும் எனும் நூலில் இருந்து பெறப்பட்டது.

## இவ்வார விழிப்பில்...

- ஆயுதக்குழு விவகாரம் - ஒரு பார்வை
- அரசியல் சூழலும் மக்களும்
- புத்தளம் முஸ்லிம்களின் இன்றைய நிலை
- வவுனியா அகதி வாழ்வு
- சர்வதேச கண்ணிவெடி தினம்

## கருத்தாடல் களம்

### கடல் வலய தடை நீக்கப்படவேண்டும்

கடற்படையால் விதிக்கப்பட்டுள்ள கடல் வலயத்தடை மீனவர்களான எம்மை மீண்டும் துயரத்தில் ஆழ்த்தியுள்ளது. சுமார் 25 வருடங்களுக்கு மேலாக பல்வேறு கெடுபிடிகள், தாக்குதல்கள், துன்பங்களுக்கு மத்தியில் தான் மீனவர்களான நாம் செத்துச் செத்து வாழ்ந்து வருகிறோம். மீனவர்கள் பலர் இறந்து விட்டனர். பலர் இடம் பெயர்ந்து விட்டனர். பலர் தொழிலைக் கைவிட்டு வறுமையில் உழல்கின்றனர்.

இந்த சூழலில்தான் போர்நிறுத்த உடன்படிக்கையின் பலனாக எமக்கு ஓரளவு நிம்மதி கிடைத்தது. எங்களால் ஓரளவு மூச்சுவிட முடிந்தது. ஆனால் புதிய ஜனாதிபதியின் ஆட்சியில் எமக்கு இந்தத் தடை மீண்டும் விதிக்கப்பட்டுள்ளது. இதன் மூலமாக எமது மீன்பிடி தொழில் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எமது உயிருக்கும் உத்தரவாதமில்லாத நிலை தோன்றியுள்ளது. எனவே தயவுசெய்து கடல் வலயத் தடையை நீக்கும்படி நாம் அரசாங்கத்தைக் கோருகிறோம்.

கிருஷ்ணமூர்த்தி செந்தூரன்
வடமராட்சி

## நிகழ்வுகள்

சுனாமியாலும் யுத்தத்தினாலும் பாதிக்கப்பட்ட மக்களது அதிலும் குறிப்பாக அங்கவீனர்களின் உளவளத்தினை மேம்படுத்துவதற்கான கலை முயற்சியொன்றினை சுனேரா மன்றமும் தேசிய இளைஞர் சேவை மன்றமும் இணைந்து கடந்த மார்ச் 10ம் திகதி மீபே தொழில் நிபுணத்துவ கல்வி

### உளவளத்துணை பயிற்சி



அபிவிருத்தி முகாமைத்துவ நிலையத்தில் ஏற்பாடு செய்திருந்தன.

இந்நிகழ்வின் ஒரு பகுதியாக பல பிரதேசங்களிலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட 28 இளைஞர் யுவதிகளுக்கு உளவளத்துணை தொடர்பிலான பயிற்சி அளிக்கப்பட்டதுடன் அவர்களின் ஊடாக சுனாமியால் பாதிக்கப்பட்ட காலி, மாத்தறை, அம்பாந்தோட்டை, அம்பாறை, யாழ்ப்பாணம் போன்ற பிரதேசங்களில் பயிற்சிப் பட்டறைகள் நடாத்தவும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் சுனேரா மன்றத்தின் தலைவி சுனேத்திரா பண்டாரநாயக்க குறிப்பிடும் போது "எட்டு வருட காலமாக நாங்கள் இவ்வாறான வேலைத்திட்டங்களில் ஈடுபட்டுள்ளோம் என்பதை சகலரும் அறிவர். இந்த வேலைத்திட்டங்கள் அவர்களின் தன்னம்பிக்கையை கட்டியெழுப்ப ஒரு கருவியாக அமைகிறது. இவர்கள் அங்கவீனர்களாக இருந்தாலும் இவர்களினுள் வெவ்வேறான திறமைகள் உள்ளன. அவற்றை வெளிக்கொண்டு வரும் வெவ்வேறான முயற்சிகள் எம்மிடம் உள்ளன."

**- அகமத் யுஸ்ரி**

எவ்வாறெனினும் மனித வன்முறைகளாலும், இயற்கை அனர்த்தத்தினாலும் பாதிக்கப்பட்டு உதவியற்ற நிலையில் உள்ள மக்கள் தொடர்பில் இதுபோன்ற அவதானங்கள் செலுத்தப்படுவது வரவேற்கத்தக்க விடயமாகும். அத்துடன் இது போன்ற வேலைத் திட்டங்கள் கிராமப்புறங்களுக்கும் குறிப்பாக வட கிழக்கு பிரதேசங்களுக்கும் சென்றடையும் விதத்தில் விரிவாக்கப்படுவது மிக அவசியமாகும்.

## விதைக்கப்படல்

எங்களால்
எதையும்
தொலைத்ததாய்
தெரியவில்லை.

எங்களுக்குள் மட்டும்
விதைக்கப்பட்டிருக்கின்றன
விதைகள்
நம்பிக்கை மரங்களாய்
நல்ல நிழல்கள்
வேண்டி

நீண்ட
எங்கள்
ஒரு பயணத்திற்கான
சிறு இடைவேளையில்
நிலைமைகளை
உள்ளடைத்து
அவைகள்
தாப்பா
போட்டுக் கொள்கின்றன

கசப்புக்குள்ளும்
கறுப்புக்குள்ளும்
மையெடுத்து
காவியம்
எழுதுவது தானே
எங்கள்
போராளிக் கவிஞனின்
புதிய உத்தி

கு. பா. தீபச்செல்வன்
ஆனந்தபுரம்
கிளிநொச்சி

## வாசகர் கவனத்திற்கு...

கருத்தாடல் களத்திற்கு உங்கள் கருத்துக்களும் வரவேற்கப்படுகின்றன.

அத்தோடு விழிப்பின் பதிவுகள் தொடர்பான உங்கள் அபிப்பிராயங்களையும் விமர்சனங்களையும் நாங்கள் எதிர் பார்க்கிறோம்.

எழுதி அனுப்ப வேண்டிய முகவரி

**விழிப்பின் பதிவுகள்**
யங் ஏசியா டெலிவிஷன்
இல, 713. டீபி. விஜயசிங்க மாவத்தை,
பெலவத்தை, பத்தரமுல்லை.

மின்னஞ்சல் முகவரி :- villippu@yatv.net




விழிப்பு நிகழ்ச்சி TNL அலைவரிசையில் செவ்வாய் தோறும் இரவு 7.25 மணிக்கும், ரூபவாஹினி 'ஐ'அலைவரிசையில் திங்கள் தோறும் இரவு 7.30 மணிக்கும் ஒளிபரப்பாகும். விழிப்பு நிகழ்ச்சி தொடர்பான உங்கள் அபிப்பிராயங்கள் வரவேற்கப்படுகின்றன. அனுப்பவேண்டிய முகவரி :- விழிப்பு, யங் ஏசியா டெலிவிஷன், இல 713, டீபி. விஜயசிங்க மாவத்தை, பெலவத்தை, பத்தரமுல்லை. தொலைபேசி இல 0112787041-9 தொலைநகல் இல 0112787051 மின்னஞ்சல் முகவரி villippu@yatv.net இணையத்தள முகவரி www.yatv.net

பக்க வடிவமைப்பு (கணனி) - சிற்றம்பலம் கணேசன்

# பிரதேச சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைக்குமாறு வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

பிரதேச சபையின் செயற்பாட்டுக்கு ஒத்துழைப்பு வழங்குமாறு வலிகாமம் கிழக்கு பிரதேச சபை பொதுமக்கள் ,சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள் ஆகியவற்றைக் கேட்டுள்ளது.

இது தொடர்பாக பிரதேச சபையின் செயலாளர் த. நடராசா வெளியிட்ட அறிக்கையில்,

கடந்த வருடம் எமது சபையானது சபை நிதி, அரசாங்க அதிபரிடம் பெற்ற நிதி மாகாண சபை நிதி, 'நிக்கொட்' நிறுவன உதவி மூலம் பெற்ற நிதிகளிலிருந்து பலதரப்பட்ட அபிவிருத்திப் பணிகளை மேற்கொண்டது.

அத்துடன் பாராளுமன்ற உறுப்பினர்களது உதவியினால் பன்முகப்படுத்தப்பட்ட நிதி மூலமும் அபிவிருத்தி வேலைகள் மேற்கொள்ளப்பட்டன.

இவ்வருடமும் அவ்வாறான பணிகளை மேற்கொண்டு எமது வலிகிழக்குப் பிரதேசத்தை முன்னேற்றுவதற்கு பொது மக்களது ஒத்துழைப்பை எமது சபை பெரிதும் வேண்டி நிற்கிறது.

எனவே மக்கள் தமது பொறுப்புக்களை உணர்ந்து பிரதேச சபைக்கு செலுத்த வேண்டிய சோலைவரி, வியாபார வரி, வாடகைகள், குத்தகைகள், பொது உரிமங்களை உடன் செலுத்தி உதவும்படி வேண்டுகின்றோம்.

மேலும் சட்ட நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்காமல் அனுமதி பெறப்படாது ஆரம்பிக்கப்படும் கட்டட வேலைகளுக்கு அனுமதி பெறுவதன் மூலமும் அனுமதி பெறாமல் ஆரம்பிக்கப்படுகின்ற வியாபார நிலையங்கள் அதற்கான அனுமதியை பெறுவதன் மூலமும்,

சபையின் நிதி வளத்தை உயர்த்த முடியும் என்பதை தெரிவித்துக் கொள்கின்றோம்.

இவ்வருடத்திற்கான வேலைத்திட்டங்களை முன்னெடுப்பதற்கு போதிய நிதி வசதி இல்லாதிருப்பதால் சனசமூக நிலையங்கள், பொது நிறுவனங்கள், மக்களுக்கு சபையின் செயற்பாடுகள் தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தி நிதி வளத்தை பெருக்கி அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ள ஒத்துழைக்கும்படி வேண்டுகிறோம் என்றுள்ளது. (க)

## கட்டாக்காலி நாய்களால் தொ...

கைதடியில் அமைந்துள்ள அரச முதியோர் இல்... வளாகத்தில் கட்டாக்காலி நாய்களின் பிரசன்ன... அதிகமாக இருந்து வருவதால் இல்லச் செயல்பா... களில் பெரும் சிரமங்கள் ஏற்பட்டுள்ளன எனத் தெ... விக்கப்படுகின்றது. இவ்விதம் கட்டாக்காலிகளாக... திரியும் நாய்கள் இல்லத்திலுள்ள முதியோர் வி... திகளுக்கும் அடிக்கடி சென்று தங்கியிருக் கு... முதியோருக்கும், இல்ல ஊழியர்களுக்கும் தொ... லை ஏற்படுத்தி வருவதாகவும் கூறப்படுகின்றது.

முதியோர் இல்லத்தில் பெரும் எண்ணிக்கை... யில் நடமாடும் கட்டாக்காலி நாய்களைக் கட்டுப்படுத்... உரிய நடவடிக்கைகளை எடுத்து உதவும் ப... இல்ல அதிகாரிகள் தென்மராட்சிப் பிரதேச செயல... ரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளனர். (சு-16)

## தேர்த்திருவிழா

வேலணை தெற்கு துறையூர் இலந்த வனம் அருள்மிகு பூரணை புட்கலை சமேத ஹரிஹர புத்திர ஐயனார் ஆலய தேர்த்திருவிழா நாளை திங்கட்கிழமை வெகு சிறப்பாக நடைபெறவுள்ளது. தேர்த்திருவிழாவானது பகல் 11.30 மணிக்கு யாழ்ப்பாணம் ஸ்ரான்லி கல்லூரி ஆசிரியர் மதுரகவி காரை எம்.பி அருளானந்தன் 'ஐயனார் வழிபாடு' எனும் தலைப்பில் சொற்பொழிவாற்றவுள்ளார். (து)

# படுகொலை செய்யப்பட்ட விக்னேஸ்வரனின் இறுதிச்சந்திப்பும் இறுதி நேர்காணலும்...

(திருகோணமலை)

**அரசானது தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின் யுத்த ரீதியாக பலப்படுத்த வேண்டுமே தவிர தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாழ்வுரிமையைப் பறிக்கிற செயற்பாட்டை மேற்கொள்வதன் மூலம் பலப்படுத்தக்கூடாது என்று (படுகொலை செய்யப்பட்ட) திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் வ.விக்னேஸ்வரன் தனது இறுதி நேர்காணலில் கூறியிருந்தார்.**



விடுதலைப் புலிகளின் உத்தியோகபூர்வ வானொலியான புலிகளின் குரலில் ஒலிபரப்பாகிய கருத்துப்பகிர்வு நிகழ்ச்சியில் கடந்த வியாழக்கிழமை இரவு அவரது நேர்காணல் ஒலிபரப்பானது.

விக்னேஸ்வரனின் இறுதி நேர்காணலின் எழுத்துவடிவம்.

திருகோணமலையில் கடற்படையினரது அத்துமீறல் சம்பவங்கள் பற்றி கண்காணிப்புக் குழுவிடம் முறைப்பாடு செய்ய திருகோணமலை தமிழ் கடற்றொழிலாளர் சங்கத்தின் பிரதிநிதிகள், திருகோணமலை தமிழ் மக்களின் பிரதிநிதிகள் கடந்த வியாழக்கிழமை சந்திப்பை மேற்கொண்டார்கள். இச்சந்திப்பில் நானும் பங்கேற்றிருந்தேன்.

இச்சந்திப்பின் போது திருகோணமலை மாவட்டத்தில் கடற்படையினர் திட்டமிட்ட அடிப்படை யுத்த நிறுத்த ஒப்பந்தத்தை மீறும் வகையில் செயற்படுவதானது எதிர்வரும் 19ஆம் திகதி நடைபெறவுள்ள சமாதானப் பேச்சுவார்த்தையை நிச்சயமாக குழப்புகின்ற செயல் என்று சுட்டிக்காட்டினோம்.

கடற்படையினர் மேற்கொண்டு வரும் இந்த யுத்த நிறுத்த ஒப்பந்த மீறல்களானது அப்பட்டமான மனித உரிமை மீறல் என்றும் கண்காணிப்புக் குழுவினருக்குத் தமிழ் மக்கள் பேரவையினர் தெரிவித்தனர்.

தமிழ் மக்களினது குறிப்பாக தமிழ் மீனவர்களினது தொழில் செய்யும் உரிமையைத் திட்டமிட்ட வகையில் பறிப்பதனூடாக அவர்களது அன்றாடம் சீவிக்கும் உரிமையைப் பறிக்கின்ற காரணத்தால் ஒரு பட்டினிச் சாவை எதிர்நோக்கியுள்ளனர்.

எனவே கடற்படையினர் திட்டமிட்டுச் செய்கின்ற இந்த செயற்பாடுகளை நிறுத்திவிட்டால் இது தொடர்பில் கண்காணிப்புக் குழு அறிக்கை ஒன்றை வெளியிட வேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொண்டோம்.

இது சம்பந்தமாக ஒவ்வொரு நாளும் அரசாங்கத்துக்கும் கண்காணிப்புக் குழுவின் கொழும்பு தலைமையகத்துக்கும் தெரிவித்துவருவதாக திருமலை கண்காணிப்புக் குழுத் தலைவர் எம்மிடம் கூறினார். இதற்கு முடிவு எட்டப்படும் என்ற நம்பிக்கை எமக்கு இல்லை என்றும் அவர் குறிப்பிட்டார்.

எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னராக யுத்த நிறுத்த ஒப்பந்தத்தின் படி கடல் வலயத் தடைச் சட்டத்தை முற்றாக நீக்கி தமிழ் மீனவர்கள் கடலுக்குள் சென்று சுதந்திரமாக மீன் பிடிக்கும் ஏதுவான சூழ்நிலையை உருவாக்காவிட்டால் மக்கள் எதிர்ப்புப் போராட்டத்தை தொடர்ந்து நடத்த உத்தேசித்துள்ளோம். அப்போராட்டத்தின் மூலம் திருகோணமலையின் முழு இயல்பு வாழ்க்கையும் குழம்புவதாக இருந்தால் அதற்கான பொறுப்பை அரசாங்கம் ஏற்றுக்கொள்ள வேண்டியிருக்கும் என்பதை கடற்படையினருக்குத் தெரியப்படுத்துமாறு தமிழ் மக்கள் பேரவையினரும் தமிழ் மீனவர்கள் அமைப்பினரும் கண்காணிப் புக்குழுவினரிடம் கூறியிருந்தனர்.

கடந்த 2 நாட்களாக மூதூரில் தங்கியிருந்த கண்காணிப்புக் குழுவின் தலைவர் இன்றுதான் (கடந்த வியாழக்கிழமை) திரும்பியிருந்தார்.

மூதூர் பிரதேசத்தில் கடற்படையினர் தொடர்ந்து நட்த்துகிற தாக்குதல்களைத் தாங்கள் நேரடியாக கண்டதாகவும் அச்செயல்கள் தொடர்பாக அரசாங்கத்துக்கும் கொழும்பு தலைமையகத்துக்கும் முறைப்பாடு செய்திருப்பதாகவும் கண்காணிப்புக் குழுவின் தலைவர் கூறினார்.

கடற்பிரதேசம் முழுமையும் தங்களது கட்டுப்பாட்டுக்குள் உள்ளதாகவும் தங்களது கட்டுப்பாட்டுப் பிரதேசத்தில் தாங்கள் விரும்பிய வகையில் நடவடிக்கை மேற்கொள்வதை யுத்த நிறுத்த ஒப்பந்தம் தடைசெய்யவில்லை என்று கடற்படையினர் கூறுவதாக கண்காணிப்புக் குழுவினர் எம்மிடம் தெரிவித்தனர்.

வடக்கு -கிழக்கு இணைந்த தமிழர்களின் தாயகப் பிரதேசத்தில் உள்ள நிலங்கள் மட்டுமின்றி கடற்பரப்பும் தமிழ் மக்களுக்குச் சொந்தமானதுதான். தமிழரது தாயகம் என்று சொல்லும்போது நிலத்தை மட்டுமல்ல நிலத்தைச் சுற்றிய கடற்பரப் பையும் குறிக்கிறது என்று கண்காணிப்புக் குழுத் தலைவருக்கு நான் மிகவும் தெளிவாகக்கூறினேன்.

அதற்கு பதிலளித்த கண்காணிப்புக் குழு தலைவர் யுத்த நிறுத்த ஒப்பந்ததில் கடலைப் பற்றி தெளிவாக விளக்கம் இல்லாத காரணத்தால் இது தொடர்பில் எம்மால் வற்புறுத்த இயலவில்லை என்றார்.

வடக்கு-கிழக்கு இணைந்த தமிழரது தாயகம் என்கிற போது நிலம் மட்டுமல்ல கடலும் சேர்ந்தது என்பதை கடற்படைக்குச் சுட்டிக்காட்டுங்கள் என்று நாம் கண்காணிப் புக் குழுவினரிடம் தெரிவித்தோம்.

திருகோணமலையில் இத்தகைய யுத்த நிறுத் மீறல்கள் தொடர்ந்து மேற்கொள்ளப் பட்டால் எதிர்காலத்தில் சமாதானம் என்பது இல்லாது போகும்.

கடற்பிரதேசம் தங்களது கட்டுப்பாட்டில் இருக்கின்ற காரணத்தால் கடற்பிரதேசத்தைக் கட்டுப்படுத்த வேண்டிய தேவை தங்களுக்கு இருப்பதாகக் குறிப்பிட்டால் ஏன் நிலப்பரப்பில் அத்துமீறிய செயற்பாடுகளில் ஈடுபடவேண்டும்? மட்டக்களப்பிலோ யாழ்ப்பாணத்திலோ கடற்படையினர் சாதாரணமாக கடமையில் ஈடுபடாதபோது திருகோணமலை நகரிலிருந்து புல்மோட்டை வரை சகல கடற்பிரதேசத்திலும் கடற்படையினர் ஏன் கடமைக்காக நிறுத்தப்பட்டிருக்க வேண்டும்? என்று கேள்வி எழுப்பினோம்.

திருகோணமலையில் தமிழ் மக்கள் மீது திட்டமிட்ட அடிப்படையில் தாக்குதலை மேற்கொள்வதும், திருகோணமலையில் தமிழ் மக்களை அச்சுறுத்தி வைப்பதிலும் கடற்படை முனைப்பு காட்டுகிறது.

கடந்த காலங்களில் எங்களுக்கு நிறைய அனுபவங்கள் உண்டு. 1983, 1985, 1990 ஆம் ஆண்டு காலப்பகுதியில் தமிழ் மக்கள் மீது கொலை வெறித்தாக்குதல் நடத்தியவர்களும் சொத்துக்களை எரித்தவர்களும் தமிழ் மக்களை உடல் மற்றும் உளரீதியாகவும் துன்புறுத்தியவர்களும் கடற்டையினரேதான்.

கடற்படையில் உள்ள சமாதானத்தை விரும்பாத தீய சக்திகள் வேண்டுமென்றே இந்தக் குழப்பதை ஏற்படுத்துகின்றனர். இதனை நாங்கள் தொடர்ந்து மௌனமாக இருந்துகொண்டு அனுமதிக்க முடியாது. இதற்கு தீர்வு காணப்படாவிட்டால் விரைவில் மக்கள் போராட்டத்தை தொடர்ந்து நடத்துவதற்கு முடிவு செய்திருப்பதாக தெளிவாகக் குறிப்பிட்டிருக்கிறோம்.

மேலும் கடலுக்குள் செல்லும் சிங்கள மீனவர்கள் எல்லை மீறுகின்ற போது அவர்களை ஒன்றும் செய்யாமல் திருப்பி அனுப்புவதும் தமிழ் மீனவர்களை குறிவைத்து தாக்கி கொலை அச்சுறுத்தல் விடுப்பதானது இன ரீதியான வன்முறைச் செயல் என்றும் குறிப்பிட்டுள்ளோம்.

திருகோணமலை துறைமுகப் பகுதியில் சென்ற கிழமை காலை மீன் பெருந் தொகையாக வந்தது. வாழ்வதற்கு அல்லற்படுகிற மக்கள் அன்றாட சீவியத்துக்கு அல்லற்படுகிற மக்கள் 10-15 வயது சிறுவர்கள் அம்மீன்களை எடுக்கச் சென்ற போது கடற்படையினர் எதுவித காரணமுமின்றி அவர்களைத் தாக்கியுள்ளனர்.

ஒரு அப்பட்டமான கொடூரச் செயல் என்று குறிப்பிட்டு கடற்படையினர் தங்களது பாதுகாப்பைப் பலப்படுத்துவதற்காக கடல் வலயப் பாதுகாப்பு தடைச்சட்டத்தை அமுல்படுத்த முடியாது.

சீனாவிடமிருந்தும் இஸ்ரேலிடம் இருந்தும் எல்லா நாடுகளிலிருந்தும் ஆயுதங்களையும் கப்பல்களையும் வாங்கிக் குவித்திருக்கும் அரசாங்கமானது தங்களது பாதுகாப்பை உறுதிப்படுத்த வேண்டுமாயின் யுத்த ரீதியாக பலப்படுத்த வேண்டுமே தவிர தமிழ் மக்களின் ஒட்டுமொத்த வாழ்வுரிமையைப் பறிக்கிற கடல்வலயத் தடைச்சட்டத்தை நடைமுறைப்படுத்துவது நியாயமாகாது என்பதைக் குறிப்பிட்டுள்ளோம். இது தொடர்பாக இரு நாட்களுக்குள் எமக்கு சாதகமான பதிலைத் தராவிட்டால் ஏப்ரல் 17ஆம் திகதிக்கு பின்னர் தொடர் போராட்டத்தை நடத்த உத்தேசித்துள்ளோம் என்றும் கூறினோம்.

இதற்கிடையில் இன்றைய தினம்(கடந்த வியாழக்கிழமை) நிலாவெளி கடற்பிரதேசத்தில் இரு மீனவர்கள் கைது செய்யப்பட்டு கடுமையாகத் தாக்கப்பட்டு அதன் பின்னர் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

ஒட்டுமொத்தமாக கண்காணிப்புக் குழுவினரிடம் நாம் கூறியது என்னவெனில் ஒரு பக்கம் சமாதானம் என்று கூறிக்கொண்டு சமாதானத்தை 100 வீதம் செயற்படுத்துவதாக ஜெனீவாவில் ஒப்புக்கொண்டு வந்துவிட்டு 10 வீதத்தைக்கூட அமுல்படுத்தாமல் மீண்டும் ஒரு பேச்சுவார்த்தை என்று விடுதலைப் புலிகளை அழைப்பது ஏமாற்றுச் செயல். இதை நாங்களும் தமிழீழ விடுதலைப் புலிகளும் ஒருபோதும் ஏற்றுக்கொள்ள மாட்டோம்.

எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுவார்த்தை தொடர வேண்டுமாயின் எஞ்சியுள்ள நாட்களுக்கு இடையிலாவது ஜெனீவாவில் ஒப்புக்கொள்ளப்பட்ட விடயங்களை அரசாங்கம் நிறைவேற்ற வேண்டும். அவ்வாறு நிறைவேற்றத் தவறுமாயின் பேச்சுவார்த்தை நீடிக்குமா என்பது ஐயத்துக்குரிய விடயம். அவ்வாறான நிலை ஏற்படுமெனில் அதற்கு குறிப்பாக கடற்படையினரே பொறுப்பேற்க வேண்டும் என்று கூறினோம் என்று விக்னேஸ்வரன் கூறியிருந்தார். (க)

## இல்ல வழிபாடு

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறை மறை மாவட்ட மக்களால் கடந்த 2005ஆம் ஆண்டு ஐப்பாசி மாதம் முதலாம் திகதி ஆரம்பமான இல்ல வழிபாடு தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

ஒவ்வொரு இல்லங்கள் தோறும் புனித செபமாலை அன்னையின் சொரூபம் வைக்கப்பட்டு வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன. (க-72)

## இன்று ஒரு தகவல்

### குரு கேட்ட தட்சனை

ஒரே ஒரு ஊரில் ஒரே ஒரு ராஜா இருந்தார். அந்த ராஜயவுகக்கு ஒரே ஒரு கவலை. என்ன கவலை? அவருக்கு இருக்கும் ஒரே பிள்ளை சரியாகப் படிக்காமல் ஊர் சுற்றிக்கொண்டிருக்கிறானே என்ற கவலைதான். ராஜா கவலையாக இருப்பதைப்பார்த்து விட்டு மந்திரி அருகில் வந்தார். "அரசே! நமது இளவரசரை பக்கத்தில் இருக்கும் காட்டுக்கு அனுப்பி அங்கேயிருக்கும் முனிவரிடம் கொஞ்ச நாள் பாடம் படித்து விட்டு வருவதற்கு ஏற்பாடு செய்தால்... இவர் புத்திசாலியாகி விடுவார்.... என்றார்.

ராஜாவுக்கும் இந்த யோசனை "சரி என்று பட்டது. உடனே இளவரசனை அழைத்துக்கொண்டு அந்த முனிவர் இருக்கும் ஆச்சிரமத்திற்குப்போனார். அங்கே ஒரு மரத்தடியில் உட்கார்ந்துகொண்டு அந்த முனிவர் தன்னுடைய சீடர்களுக்குப் பாடம் நடத்திக்கொண்டிருந்தார். சொல்லிக் கொடுப்பதிலேயே கவனமாக இருந்தார். அதனால் பக்கத்தில் வந்து நின்று கொண்டிருக்கும் ராஜாவை அவர் கவனிக்கவில்லை. இதுராஜாவுக்கு மிகுந்த அவமானமாகப் போய்விட்டது. ஆத்திரம் தலைக்கேறி உடம்பு துடித்தது.

இருந்தாலும் மகனை அவரிடம் சேர்க்க வேண்டுமே என்பதற்காகப் பொறுத்துக் கொண்டார் பல்லைக்கடித்துக் கொண்டிருந்தார். கோபத்தை வெளியில் காட்டிக்கொள்ளவில்லை. கொஞ்சம் நேரம் கழித்து முனிவர் நிமிர்ந்து பார்த்தார்.

இப்பொழுது குரு தட்சனை எதுவும் எனக்குத் தேவையில்லை அதைத்திருப்பி எடுத்துக்கொள் நான்கேட்கிறபோது கேட்பதைக்கொடுத்தால் போதும் என்றார். குரு பேச்சுக்கு மறு பேச்சுப் பேசலாமா இளவரசன் பேசாமல திரும்பி வந்து விட்டான். இளவரசன் புத்திசாலியாகத் திரும்பி வந்ததிலே அந்த ராஜாவுக்கு பெரிய சந்தோஷம் இருந்தாலும் அந்த முனிவர் ஆரம்பத்திலே தன்னை அலட்சியப் படுத்தினார் என்பதை ராஜா மறக்கவில்லை. அந்தக் கோபத்தை இப்பொழுது காட்டினார்.

படைவீர்களை காட்டுக்கு அனுப்பி அந்த ஆச்சிரமத்தை சூறையாடச்சொன்னார். அவ்வளவு தான் படைவீரர்கள் போய்ஆச்சிரமத்தை அடித்து நெருக்கிவிட்டு வந்துவிட்டார்கள். இது இளவரசனுக்குத்தெரியாது.

கொஞசக்கலம் கழித்து இளவரசன் தன்னுடைய குருவைப் பார்ப்பதற்காக காட்டுக்குப்போனான். அங்கே போய்ப் பார்த்தால் குருவைக்காணவில்லை. ஆச்சிரமத்தையும் காணவில்லை. காடு முழுவதும் அலைந்து திரிந்தார்.

கடைசியாக ஓர் ஆற்றங்கரையிலே அந்தக் குருவினுடைய ஆச்சிரமம் தெரிந்தது ஓடிப்போய் குருவை வணங்கினான் அவர் பாதத்திலே குரு தட்சணையை வைத்தான்.

அப்பொழுது முனிவர் அதை தொடவே இல்லை. தேவைப்பட்டப்போது வாங்கிகொள்கிறேன் என்று சொல்லிவிட்டார். சரி என்று சொல்லிவிட்டு இளவரசனும் புறப்பட்டான்.

ஆச்சிரமத்திற்குவெளியிலே சில சீடர்கள் இதனைக் காட்டி கசமுசா என்று என்னமோ பேசிக்கொண்டிருந்தார்கள. கொஞ்சம் உற்றுக்கவனித்தான. தன்னுடைய குருவின் ஆச்சிரமத்தை அளித்தது தன்னுடைய தந்தைதான் என்ற விபரததை புரிந்துகொண்டான அவ்வளவு தான் கோபம் வந்து விட்டது.

இப்பொழுதே போய் என் தந்தையின் தலையை வெட்டிக் கொண்டு வந்து என் குருவின் பாதத்திலே வைக்கிறேன் பார் என்று கத்தினார். வெறியோடு வாளை உருவிக்கொண்டு புறப்பட்டான. சீடர்கள் ஓடிப்போய் குருவிடம் விசயத்தைச் சொன்னார்கள்.

ஓடிபபோய் இளவரசனை தடுத்து இங்கே அழைத்து வாருங்கள்" என்றார் குரு. சீடர்கள் போய் இளவரசனை அழைத்து வந்தார்கள் இளவரசன் கோபத்துடன் வந்தார்.முனிவர் அவனைப் பார்த்தார்.

இப்பொழுது எனக்கு "குரு தட்சனை வேண்டும்" என்றார் குரு "என்ன வேண்டும் என்று கேட்டான் இளவரசன். கோபம் என்றார் குரு. "உன்னிடம் இருக்கிற கோபத்தை எனக்கு குரு தட்சனையாகக்கொடு' என்றார் குரு. இளவரசர் தலையைக் குனிந்தபடி நின்றான். சிறிது நேரத்தால் அரண்மனைக்குத் திரும்பிப்போனார் இங்கே நடந்தது எல்லாம் ராஜாவுக்குத்தெரிந்தது அவர் ஓடோடி வந்து முனிவர் காலிலே விழுந்து மன்னிப்புக்கேட்டார். இது ஒரு கதை.

எங்களிடம் உதவி பெற்றுக்பயனடைந்தவர்களே எங்களுக்கு கெடுதல் செய்ய நினைப்பதுமுண்டு. அவர்களையும் நம்முடைய பண்பாலே வெற்றிகொள்ளமுடியும் என்பது இந்தக் கதையின் கருத்து.

அந்தக் காலத்திலே பையன் ஒருவன் ஒரு வாத்தியாரிடம் நல்ல பண்புகளைக் கற்றுக்கொள்வதற்காக போனான் ஒரு வெள்ளிக் குத்துவிளக்கை அவருக்கு முன் குரு தட்சனையாக வைத்தான். சார் இதை குரு தட்சனையாக எடுத்துக் கொண்டு எனக்கு சில நல்ல பழக்கங்களைச் சொல்லிக் கொடுக்கனும என்று கேட்டுக்கொண்டான. வார்த்தியார் நிமிர்ந்து பார்த்தார். "உனக்கு இனிமேல் சொல்லிக்கொடுக்கவேண்டிய அவசியமில்லையப்பா! நீ நல்லவனாகிவிட்டாய் இப்ப என் மனசு நிறைஞ்சு இருக்கு என்றார். "ஏன் அப்படிச் சொல்கிறீர்கள்' என்றான் பையன். இந்த குத்துவிளக்கு போன மாதம் எங்க வீட்டிலே திருட்டுப்போனது தான் அப்படி என்றார் வாத்தியார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## நூலகங்கள் சிறப்பாக இயங்கினால் நல்ல பிரஜைகளை உருவாக்கமுடியும்

### யாழ்.மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே.சிவஞானம்

(பருத்தித்துறை)

கிராமங்கள் தோறும் நூலகங்கள் சிறப்பாக இயங்கும் போது தான் எதிர்காலத்தில் நாட்டிற்குச் சிறந்த நற்பிரஜைகள் உருவாக முடியும். வாசிப்பு மனிதனை முழு மனிதனாக்குகின்றது.

இன்றைய காலத்தின் தேவையை கருத்தில் கொண்டு யாழ்பாணப்பல்கலைக்கழக நூலகர் செல்வி அருளானந்தம்" நூலகப்பகுப்பாக்கம்" நூலை வெளியிட்டு வைத்திருப்பது பாராட்டுக்குரியதாகும்.

மேற்கண்டவாறு யாழ். பல்லைகழக கல்விசார் நூலகர் செல்வி ஸ்ரீ அருளானந்தத்தின் நூலப்பகுப் பாக்கம் நூல் வெளியீட்டு விழாவிலும் தேசிய வாசிப்பு மாத பொது அறிவுப்போட்டிப்பரிசளிப்பு விழாவிலும் பிரதம விருந்தினராக கலந்துகொண்ட யாழ். மாநகர சபை ஆணையாளர் சி.வீ.கே. சிவஞானம் குறிப்பிட்டார்.

நூலக விழிப்புணர்வு நிறுவகத்தால் யாழ். மாநகரசபை பொது நூலக மண்டபத்தில் அண்மையில் நடத்தப்பட்ட இவ் விழாவிற்கு யாழ். பொதுநூலக பிரதம நூலகர் எஸ்.தனபாலசிங்கம் தலைமை தாங்கினார்.

நூலகர் எம்.வி.குணாளன் வரவேற்புரை நிகழ்த்தினார். கலாநிதி ஏ.சபாரத்தினம் நூலின் முதற்பிரதியைப் பெற்றுக்கொண்டார்.

யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திருமதி மதுமதிவசந்தகுமார் உரையாற்றுகையில் குறிப்பிட்டதாவது,

நூலகங்களே மனிதனை வெற்றிகொள்ளும் அறிஞனாக உருவாக்குகின்றன. அந்நூலகங்கள் சிறப்பாக இயங்கவேண்டியது இன்றைய காலத்தின் முக்கிய தேவையாகும்.நூலகங்களின் சிறந்த செயற்பாடுகளுக்கு இன்று வெளியிடப்பட்டுள்ள நூலகப்பகுப்பாக்கம் நூல் இன்றியமையாததாகவுள்ளது. இந்நூல் அறிவைத்தேடும் இன்றைய மக்களுக்கு அரிய பொக்கிச்மாகும்.

மக்கள் மத்தியிலே இன்று வாசிப்புத்திறன் குன்றி வருவது மிகக் கவலைக்குரியதாகும். நூலக விழிப்புனர்வு நிர்வகம் வாசிப்பு விழிப்புணர்வுத் திட்டங்களை நடை முறைப்படுத்தி வருவது மிக மகிழ்ச்சிக்குரியதாகும். மாணவர்களின் அறிவுத்தேடல் போட்டிகளை நடாத்தி அவர்களை ஊக்கிவிப்பது வரவேற்றகப்படவேண் டியதாகும்.

இன்றைய தேவைகளுக்குகேற்ப உள்ளூராட்சி ஆட்சி திணைக்களம் பொது நூலகங்களை சிறப்பாக செயற்படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

யாழ். பல்கலைக்கழக பேராசிரியர் எம்.நித்தியானந்தன் குறிப்பிட்டதாவது ,

அறிவைத்தேடும் உலகிலே நூலகப் பகுப் பாக்கம் அறிவின் திறவு கோளாகத் திகழ்கின்றது. நூலகங்களின் நூல்கள் பகுப்பாக்கம் செய்யப்படும் போது வாசகர்களுக்கு பல்வேறு நன்மைகள் கிடைக்கின்றன. நூலகப் பகுப்பாக்கம் நூல் நூலகர்களுக்கு பெரிதும் உதவுவதோடு பல்வேறு மக்களுக்கும் நன்மைகளையும் வழங்கும்.

யாழ். கல்வி வலய நூலகர் உதவிக்கல்விப் பணிப்பாளர் திருமதி மீரா அருள்நேசன் நூல் வெளியீட்டுரையையும், யாழ். பல்கலைக்கழக பதில்நூலகர் திருமதி ஆர் கருணானந்தராஜா ஆய்வுரையையும் நிகழ்த்தினார்.

யாழ்.தேசிய கல்வியியற் கல்லூரி உப பீடாதிபதி பீ. தனபாலன் இலங்கை நூலக சங்க யாழ். பிராந்திய இணைப்பாளர் திருமதி கல்பனா சந்திரசேகரம் தென்மராட்சிவலய கல்விப்பணிப்பாளர் திருமதி ஏ. வேதநாயகம் உட்பட இன்னும் பலர் உரையாற்றினர். நூலாசிரியர் செல்வி அருளானந்தம் பதில் உரை நிகழ்த்தினார். நூலகர் எஸ்.செளந்தரராஜன் நன்றியுரை நிகழ்த்தினார்.

தேசிய வாசிப்பு மாதத்தை ஒட்டி பாடசாலை மாணவர்களுக்கிடையே நடாத்தப்பட்ட போட்டிகளில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கான பரிசில்களும் வழங்கப்பட்டன. (க-52)

## நேரமாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம்

(கொழும்பு)

இலங்கையில் மீண்டும் நேரமாற்றம் செய்வதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

நேரமாற்றம் குறித்த ஆலோசனையை அனர்த்த முகாமைத்துவ அமைச்சர் மஹிந்த சமரசிங்க கடந்த வியாழக்கிழமை அமைச்சரவைக்கு சமர்ப்பித்ததாகவும் அதற்கு அமைச்சரவையின் அங்கீகாரம் கிடைத்திருப்பதாகவும் தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

எதிர்வரும் 14ஆம் திகதி நல்லிரவு முதல் அரை மணி நேரம் பின்நகர்த்தப்படும் 1996ஆம் ஆண்டு நாட்டில் அரை மணி நேரம் முன்நகர்த்தப்பட்டது. அவ் வருடத்தில் ஏற்பட்ட மின் நெருக்கடியை சமாளிக்கவே நேரமாற்றம் மேற்கொள்ளப்பட்டது.

ஆனால் இந் நேர மாற்றம் வெற்றியளிக்க வில்லை என்று ஊடகங்கள் மற்றும் சமுகத்தின் பல பிரிவுகளும் சுட்டிக்காட்டியதாக தகவல் திணைக்களம் தெரிவித்துள்ளது. இந்தக்கருத்துக்களை ஆராய்ந்த அரசாங்கம் மீண்டும் நேர மாற்றம் செய்வதற்கு அனுமதி வழங்கியுள்ளது. (க-9)

## விடுதலைப் புலிகள் ஏடு வெளிவந்துள்ளது

தமிழீழ விடுதலைப்புலிகளின் (2006 மாசி, பங்குனி) ஏடு நேற்று வெளிவந்துள்ளது. "விடுதலைப் புலிகள் ஏட்டின்" 129ஆவது குரலில் பல அரசியல் கட்டுரைகள் உலைக்களம் , விழுதுகள் மற்றும் போராளிகளின் படைப்புக்கள் போன்ற அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. (கு)

## கடற்றொழிலாளர்களை புனர்வாழ்வு நிலையில் இருந்து அபிவிருத்தி நிலைக்கு மாற்றவேண்டும்

### உணவு விவசாய நிறுவன கிழக்கு பிராந்திய பணிப்பாளர் ஸ்ரீவ் கிறீச்

(தென்மராட்சி)

கடற்றொழிலில் ஈடுபடுவர்களை புனர்வாழ்வு நிலையில் இருந்து அபிவிருத்தி நிலைக்கு மாற்ற வேண்டும். கடற்றொழிளார்கள் மற்றவர்களின் கைகளில் தங்கியிருக்காது தமது சொந்தக் கைகளை நம்பி வாழக்கூடிய நிலையைத்தான் இனிவரும் காலங்களில் உருவாக்க வேண்டும்.

இவ்வாறு உணவு விவசாய நிறுவனத்தின் வடக்கிழக்குப் பிராந்தியப் பணிப்பாளரான கலாநிதிஸ்ரீவ் கீறிச் கடந்த புதன்கிழமை யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத்தில் உணவு விவசாய நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட செயற்பட்டறையில் உரையாற்றும் போது தெரிவித்தார்.

இணையத் தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடை பெற்ற இச்செயற்பட்டறையில் கலாநிதி ஸ்ரீவ் கீறிச் தொடர்ந்து உரை யாற்றும் போது,

சுனாமி ஆழிப்பேரலையைத் தொடர்ந்துஅரசசார்பற்ற நிறுவனங்கள் மாறி மாறி கடற்றொழிலாளர்களுக்கு மீன் பிடி உபகரணங்களை வழங்குவதையே வழக்கமாக்கியுள் ளனர்.

இதனால் கடற்றொழிலாளர் கள் தொடர்ந்தும் பிறரில் தங்கியிருக் கும் நிலையை உருவாக்கிக்கொள்கின்றனர்.

அபிவிருத்தி பற்றி யாருமே இன்னமும் சிந்திக்கவில்லை. கடற்றொழிலை நாம் திட்டமிட்ட முறையில் அபிவிருத்தி செய்யவேண்டும்.

இன்றைய நிலையில் கடற் றொழிலாளர்களின் நலனுக்கு என உருவாக்கப்பட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்கள் எதிர்பார்க்கப்பட்டபடி இயங்க வில்லை.

சங்கங்கள் வலுவடையவில்லை பலம் பெறவில்லை சங்கங்களின் பலம் என்ன? பலயீனம் என்ன? வாய்ப்புக்கள் உள்ளனவா? அச் சுறுத் தல்கள் இருக்கின்றனவா? என்பது பற்றிய ஆய்வுகள் செய்யப்பட வேண்டும்.

கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் பிரச்சினைகள் என்ன ? அடிப்படை தேவைகள் என்ன? என்பது குறித்து சரியான கணிப்புக்கள் செய்யப்பட வேண்டும் இப்பணிகளை செய்வதற்கு கூட்டுறவுச் சங்கங்களின் போதிய ஆளணியினர் இல்லாமல் இருப்பது பற்றித் தெரியவந்துள்ளது.

ஆதலால்த்தான் உணவு விவசாய நிறுவனம் உள்ளூர் அரச சார் பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் சங்கங்களின் நிலவரம் அறியும் ஆய்வுகளையும் தக்வல் திரட் டும் பணியை ஆரம்பிக்கவுள்ளது.

கடற்றொழிளர்களை இனியும் மற்றவர்களிடம் கையேந்தும் நிலையில் வைத்திருக்க அனுமதிக்கக் கூடாது.

இந்த வகையில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் வாழ்கின்ற கடற் றொழிலாளர்களின் சமூக பொருளாதார நிரையில் ஒரு புதிய மாற்றத்தை ஏற்படுத்த உணவு விவசாய நிறுவனம் முன்வந்துள்ளது என்றார்.

இச்செயற்பட்டறையில் உணவு விவசாய நிறுவனத்தின் அதிகாரி எஸ்.செல்வராஜா கடற்றொழில் திணைக்களத்தின் மாவட்டப் பணிப் பாளர் கூட்டுறவுத்திணைக்களத்தின் பிரதிநிதி இணையச் செயலாளர் வீ. சிறிசக்திவேல் உட்பட வேறும் பலர் பங்கு கொண்டிருந்தனர்.

கடற்றொழிலாளர் சங்கங்கள் குறித்த ஆய் வினை இணையம் புதுவருடப்பிறப்பினை தொடர்ந் து ஆரம்பிக்கவுள்ளதாக தெரியவருகின்றது. (க-16)

# குமரப்பா, புலேந்திரனின் இறுதி நிமிடங்கள்

## நெஞ்சு கனக்கும் பாலசிங்கத்தின் 'விகடன்' நேர்காணல்

தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதிகளான குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பன்னிரு வேங்கைகளும் இந்திய துரோகத்தால் வீரச்சாவடைய நேரிட்ட நிகழ்வின் இறுதி நிமிடங்களை விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம் நெஞ்சு கனக்க விவரித்துள்ளார்.



தமிழ் நாட்டின் ஆனந்த விகடன் வார இதழில் வெளியாகியுள்ள பாலசிங்கத்தின் நேர்காணலின் முதாவது பகுதியில் இடம் பெற்றுள்ளதாவது,

ஒரு முறை தலைவர் பிரபாகரன் என்னிடம் சொன்னார் ஓய்வென்பது நமக்கு மரணத்தில்தான் சாத்தியம் என்று அதுதான் சத்தியம்!

வசந்த காலத்தின் கைகளைக் குலுக்கி விடைபெறுகிறது குளிர்காலம். தெற்கு லண்டனில் மனைவி அடேல் பாலசிங்கத்துடன் எளிமையாக வாழ்கிறார் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் அரசியல் ஆலோசகரான அன்ரன் பாலசிங்கம்!

சிறுநீரகக் கோளாறு நீரிழிவு என உடலைத் துன்புறுத்தும் நோய்களுக்கிடையிலும் ஓயாத உழைப்பு ஓய்வில்லாத பயணங்கள் இயக்கப் பணிகள் என உற்சாகமாக இருக்கிறார். தமிழீழத்தின் சிந்தனைச் சுரங்கம்!

விடுதலைப் புலிகள் இயக்கத்துடனான தனது பிணைப்பு பற்றிப் பேச ஆரம்பித்தார் அன்ரன் பாலசிங்கம். ஆயிரத்து தொள்ளாயிரத்து எழுபத்தெட்டாம் ஆண்டு லண்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியராக இருந்த போதுதான் முதன்முறையாக அடேலைச் சந்தித்தேன் ஒருமித்த கருத்துடைய நாங்கள் பல்வேறு அரசியல் இயக்கங்களில் பங்குபெற ஆரம்பித்தோம். தென்னாபிரிக்கா, பாலஸ்தீனம், ஜிம்பாப்வே போன்ற நாடுகளின் விடுதலைக்கு ஆதரவான போராட்டங்களிலும் அமெரிக்க காலனி ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவும் தீவிரமாகப் போராடி வந்தோம்.

இந்த நிலைமையில்தான் தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் தலைவர் பிரபாகரன் என்னைத் தொடர்பு கொண்டார். உலகில் உள்ள பல்வேறுகொரில்லா விடுதலைப் போராட்டங்களைப்பற்றியும் அவற்றின் வரலாறுகளையும் தமிழில் மொழி பெயர்த்துத் தரும்படி கேட்டார். தமிழீழ விடுதலைப் புலிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்புகள் நடத்த அழைப்பு விடுத்தார். நான் முதன் முதலாக பிரபாகரனை சென்னையில்தான் சந்தித்தேன். அதன் பிறகு வருடந்தோறும் சென்னைக்கு வந்து சில மாதங்கள் தங்கி போராளிகளுக்கு அரசியல் பயிற்சி வகுப்புக்கள் நடத்த ஆரம்பித்தேன் . அப்படி ஆரம்பித்தது எங்கள் நட்பு!

இத்தனை வருட உறவில் எனக்கும் பிரபாகரனுக்கும் கருத்து வேறுபாடுகள் வந்திருக்கின்றன. ஆனால் எங்களுக்கிடையிலான நல்லுறவில் எப்போதும் பாதிப்பு ஏற்பட்டதில்லை. காரணம் நாங்கள் மிகச் சிறந்த நண்பர்கள்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் சிந்தனை வடிவம், இலட்சியம் , அரசியல் கொள்கை ஆகியவற்றை வகுத்துக் கொடுத்தது நான் தான். ஆனால் போரியல் ரீதியான வளர்ச்சியில் இந்த இயக்கத்தை நெறிப்படுத்தித் திட்டமிட்டு ஆயுதப் போராட்டத்தின் தந்தையாக விளங்குபவர் பிரபாகரன். என்னுடைய அரசியலும் அவரது போரியலும் இணைந்துதான் எமது விடுதலைப் போராட்டம் முன்னெடுத்துச்செல்லப்படுகிறது. தலைவர் என்கிற ரீதியில் அவருக்குத்தான் நாங்கள் வரலாற்று ரீதியாக முக்கியத்துவம் கொடுக்கிறோம்.

இந்த இயக்கத்தில் நான் ஒரு தொண்டன் எல்லாக் காட்டிலேயும் சிங்கம் தான் ராஜா. ஆனால் எங்கள் காட்டில் புலிதான் ராஜா என்கிறார் அழகான சிரிப்புடன்.

கேள்விகளை முன்வைக்கிறோம் சில கேள்விகளுக்குச் சிரிக்கிறார். சில கேள்விகளைத் தவிர்க்கிறார் .ஆனால் எது குறித்துப் பேசினாலும் அதன் வரலாறும் அது தொடர்பான புள்ளிவிவரங்களும் கொட்டுகின்றன அவரின் பேச்சில் .

கேள்வி:- முதன் முதலாக விடுதலைப் புலிகளை ஒரு போராளி அமைப்பாக அங்கீகரித்ததோடு ஈழப் பிரச்சினையில் பேச்சுவார்த்தைகளைத் துவக்கி வைத்த இந்தியா தற்போது ஈழப்பிரச்சினையிலிருந்து விலகி இருப்பதைப்பற்றி என்ன கருதுகிறீர்கள்?

பதில்:- புலிகள் இயக்கத்தின் தோற்றத்துக்கு முன்பிருந்தே இந்தியா ஈழத்தமிழ் மக்கள் மீது அனுதாபமும் கருணையும் காட்டி வந்துள்ளது. அதற்குக்காரணம் ஈழத்தில் இருந்தாலும் இன ரீதியாக நாங்கள் இந்தியர்கள்தான். எங்களது மூல வரலாறு இந்தியாவிலிருந்துதான் ஆரம்பமாகிறது.

எண்பத்து மூன்றாம் வருடம் இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக ஒரு மிகப் பெரிய வன்முறை கட்டவிழ்த்துவிடப்பட்டு பல்லாயிரக் கணக்கான தமிழர்கள் கொல்லப்பட்டனர். உடைமைகள் சேதப்படுத்தப்பட்டன. அது தமிழ் நாட்டில் பெருங்கொந்தளிப்பை ஏற்படுத்தியது. ஆர்ப்பாட்டங்களின் மூலமும் பேரணிகள் மூலமும் தமிழக மக்கள் தங்கள் ஈழத் தமிழர் ஆதரவு உணர்ச்சிகளைக் காட்டினார்கள் அப்போதுதான் ஈழத்தமிழர் பிரச்சினை என்பது ஏதோ இலங்கைத்தீவுக்குள் அடங்கும் பிரச்சினை அல்லஅதன் விளைவுகள் இந்தியாவின் மீதும் தாக்கத்தை ஏற்படுத்தும் என்ற உண்மையை உலகம் உணர்ந்தது.

அதன் பிறகு இந்திய அரசு ஈழத் தமிழர் பிரச்சினையில் நேரடியாகத் தலையிட ஆரம்பித்தது. இந்தச் சூழ்நிலையில்தான் ஈழத் தமிழர் பாதுகாப்புக்கு ஒரு கவசமாக எமது விடுதலைப் புலிகள் இயக்கத்துக்கும் வேறு சில போராளிக் குழுக்களுக்கும் ஆயுதம் கொடுத்து இராணுவப் பயிற்சி கொடுத்து எங்களை வளர்த்தது இந்தியா. இது வரலாற்று உண்மை!.

அதை நாங்கள் எப்போதும் மறந்ததில்லை. இப்படியாக எங்களுக்குப் பேருதவிகள் செய்து எங்களை ஒரு விடுதலை அமைப்பாக அங்கீகாரம் செய்து திம்பு பேச்சுவார்த்தையில் பங்குபெறச் செய்ததும் இந்தியாதான். அதன் பிறகு பல்வேறு காரணங்களால் இந்திய அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் சில முரண்பாடுகள் எழுந்தன. (இந்த இடத்தில் கவனத்தோடு சில கடந்த கால நிகழ்வுகளைத் தவிர்க்கின்றார்.

அதனால் இடைவெளிகள் தோன்றி சில மனக்கசப்பான சம்பவங்கள் நிகழ்ந்தன. ஆனாலும் ஒட்டுமொத்தமாகச் சொல்லும் போது இந்தியா அன்றிலிருந்து இன்றுவரை எப்போதுமே ஈழத் தமிழர்கள் அனுதாபத்தோடு தான் நடந் துவருகிறது. இந்த நிலை தொடர வேண்டும். ஈழத் தமிழர்களின் நியாயமான உணர்வுகளை இந்தியா அங்கீகரிக்க வேண்டும் என்பதே எம் விருப்பம்.

கேள்வி:- இந்தியா புலிகள் உறவில் முரண்பாடு ஏற்பட முக்கியமாக என்ன காரணம் என்று நீங்கள் கருதுகிறீர்கள்?

பதில்:- தமிழீழம் சுதந்திர நாடாக உருவாக வேண்டும் என்பதில் உறுதியாக இருந்தது. விடுதலைப் புலிகள் இயக்கம் சிங்களப் பேரினவாதிகளிடம் இருந்து எம் மக்களுக்கு எந்த நியாயமும் கிடைக்காது என்று நாங்கள் உறுதியாக நம்பினோம். அதனால் தான் எம் மண்ணை மீட்டெடுத்து எமக்கான சுதந்திரத் தமிழீழத்தை உருவாக்குவதில் தெளிவாக இருந்தோம். ஆனால் இந்திய அரசு இதை விரும்பவில்லை.

தமிழீழத்தில் ஒரு தனியரசு உருவானால் அது தமிழ்நாட்டிலும் இந்தியாவின் மற்ற சமூகங்களிடத்திலும் பிரிவினை எண்ணத்தைத் தோற்றுவிக்கும் என்ற அச்சத்தினால் எமது இலட்சியத்தை அவர்கள் ஏற்க மறுத்தார்கள். இந்த அடிப்படையில் தான் முரண்பாடு எழுந்தது.

கேள்வி:- தற்போது இந்திய அரசின் அணுகுமுறையில் மாற்றம் வரும் என்று நினைக்கிறீர்களா?

பதில்:- இந்தியா நேரடியாக இந்தப் பிரச்சினையில் இராணுவ ரீதியாகத் தலையிட்டு புலிகளுக்கு எதிராக ஒரு பெரும் இராணுவ நடவடிக்கையை எடுத்துப் பெரும் தோல்வியைத்தான் சந்தித்தது. விடுதலைப் புலிகள் இயக்கத்தை இந்திய இராணுவத்தால் நசுக்கமுடியவில்லை. மற்றபடி புலிகள் இயக்கம் இந்தியாவைப் பகைத்துக்கொள்ள விரும்பியதில்லை. எங்களுக்கு எதிராக யுத்தம் திணிக்கப்பட்ட காரணத்தால்தான் எதிர்த்துப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டோமே தவிர நாங்கள் இந்தியாவுக்கு எதிராக ஆயுதங்களைத் தூக்குவதற்கு ஒருபோதும் விரும்பியதில்லை.



ஏனென்றால் தமிழீழத்தைத் தாய் நாடாகப் பார்க்கும் நாங்கள் இந்தியாவைத் தந்தை நாடகத்தான் எப்போதும் பார்த்துக்கொண்டிருக்கிறோம். புலிகளுக்கும் இந்திய அரசுக்கும் மத்தியில் நல்ல நட்புறவு ஏற்பட வேண்டும் என்றும் நாங்கள் எதிர்பார்க்கிறோம். அப்படியான ஒரு சூழ்நிலை நிச்சயம் விரைவில் ஏற்படும் என்பதுதான் எனது கருத்து.

கேள்வி:-ஈழப்போராட்டத்தில் உங்களது பங்களிப்பில் நெகிழ வைத்த தருணம் என்று எதைக் கருதுகிறீர்கள்?

பதில்:- இந்திய அமைதிப்படை ஈழத்தில் இருந்தபோது நடைபெற்ற துயரச் சம்பவம் தான் என் மனதில் ஆழமாகப் பதிந்து விட்டது. 1987ஆம்ஆண்டுஅக்டோபர் இரண்டாம் திகதி பருத்தித்துறை கடற்பகுதியில் வைத்து குமரப்பா புலேந்திரன் உள்ளிட்ட பதினைந்து முக்கிய போராளிகள் ஸ்ரீ லங்கா கடற்படையினரால் நிராயுத பாணிகளாகக் கைதுசெய்யப்பட்டு பலாலி இராணுவ முகாமில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார்கள். இந்திய அரசுடனும் இலங்கைக்கான இந்தியத் தூதுவரிடமும் பேசி அவர்களை விடுவிக்கும் பொறுப்பு எனக்கு வழங்கப்பட்டு இருந்தது.

நான் இந்தியத்தூதுவரிடம் பேசியபோது இலங்கை இராணுவத்துடன் பேசி அவர்களை விடுதலை செய்துவிடலாம் என்று நம்பிக்கை தெரிவித்தார். நான் பலாலி இராணுவ முகாமில் சிங்கள இராணுவத்தின் வசமிருந்த எம் போராளிகளை இந்திய அமைதிப்படை அதிகாரிகளின் உதவியுடன் சந்தித்தேன். எம் போராளிகள் அங்கு குற்றவாளிகளைப் போல தரையில் உட்கார வைக்கப்பட்டிருக்க அவர்களை நோக்கித் துப்பாக்கி முனைகளைத் திருப்பியவாறு சிங்கள இராணுவத்தினர் நின்றிருந்தனர். நான் போராளிகளிடம் பேசினேன். அவர்கள் மகிழ்ச்சியுடனும் கலக்கமின்றியும் தாங்கள் விடுவிக்கப்பட்டு விடுவோம் என்ற முழு நம்பிக்கையுடனும் இருந்தார்கள்.

குமரப்பாவும், புலேந்திரனும் அதற்குச் சமீபத்தில்தான் காதல் திருமணம் செய்து கொண்டவர்கள். அவர்கள் தங்கள் மனைவியருக்கு கவலைப்படவேண்டாம் விரைவில் வந்துவிடுவோம் என்கிற தகவலை என் மூலம்தான் சொல்லியனுப்பினார்கள். ஆனால் மறுநாளே நிலைமை மோசமானது. இலங்கைப் பாதுகாப்பு அமைச்சர் அத்துலத் முதலி போராளிகளை கொழும்புக்குக் கொண்டுவந்து விசாரணைக்கு உட்படுத்த இரகசிய திட்டமிட்டிருப்பதாக இந்திய இராணுவ அதிகாரிகள் என்னிடம் தெரிவித்தனர்.

மறுநாள் மறுபடியும் போராளிகளைச் சந்தித்தேன். அப்போது அவர்கள் தலைவர் பிரபாகரனுக்கு ஒரு இரகசிய கடிதத்தை என்னிடம் தந்து அனுப்பினர். நான் அந்தக் கடிதத்தை அன்றிரவே தலைவரிடம் சேர்த்தேன். இயக்க மரபுப்படி எதிரிகளிடம் சிக்காமல் வீரமரணம் அடைய ஏதுவாக தங்களுக்கு சயனைட் குப்பிகளை வழங்கக் கோரி எழுதிய கடிதம் அது .அதைப்படித்ததும் பிரபாகரனின் கண்கள் கலங்கின. உதடுகளைக் கடித்தபடி சற்றுநேரம் யோசித்தவர் இந்திய அரசுடன் மேலும் பேசி உடனடியாகப் போராளிகளை மீட்கும்படி சொன்னார். நான் மீண்டும் முயன்றேன். ஆனால் என் முயற்சி எதுவும் பலன் அளிக்கவில்லை. இந்தியத் தூதுவரும் தன்னால் எதுவும் செய்ய முடியாத அளவுக்கு நிலைமை ஆபத்தாகிவிட்டதாகத் தெரிவித்தார்.

மறுநாள் ஒரு விசேட இராணுவ விமானத்தை அத்துலத்முதலி பலாலிக்கு அனுப்பிவைத்துள்ளார் என்றும் அன்று மாலை ஐந்து மணிக்கு எமது போராளிகள் பலவந்தமாக விமானத்தில் ஏற்றப்படுவார்கள் என்றும் இந்தியத் தூதுவர் என்னிடம் கூறினார்.

நான் உடனடியாக விரைந்து சென்று பிரபாகரனிடம் தகவலைத் தெரிவித்தேன். துயரமும் கவலையும் கோபமும் விரக்தியுமாக பல்வேறு உணர்வலைகள் கலந்ததால் பிரபாகரனின் முகம் விகாரமாக மாறியது. தனது மெய்ப் பாதுகாவலர்களான புலி வீரர்களை அழைத்து அவர்களது கழுத்துக்களில் தொங்கிய சயனைட் விஷக் குப்பிகளைச் சேர்த்தெடுத்து என் கழுத்திலும் மற்றதை மாத்தயாவின் கழுத்திலும் மாலையாக அணிவித்தார். எப்படியாவது அந்தக் குப்பிகளை எமது போராளிகளிடம் சேர்ப்பிக்க வேண்டும் என்ற உத்தரவும் பிறப்பிக்கப்பட்டது.

அன்று மதியம் உணவுப் பொதிகளுடன் பலாலி தளம் சென்று எமது போராளிகளுடன் நிகழ்த்திய இறுதிச் சந்தப்பின்போது தலைவரின் வேண்டுகோளை நான் நிறைவு செய்தேன்.

எதிரிகளிடம் சிக்கிச் சாவதை விட, தங்களின் உயிரை, தாங்களே மாய்த்துக் கொள்ள , அந்தப் பதினைந்து போராளிகளும் சயனைட் குப்பியைக் கடித்தார்கள். சிங்கள இராணுவத்தார் துப்பாக்கி பேனட்டாலும், லத்தியாலும் அவர்களின் தொண்டைக் குழிக்குள் குத்தி, விஷம் இதயத்தில் பாய்வதைத் தடுக்க முயன்றபோதும், எமது மிக முக்கியமான பத்து வேங்கைகள் அந்த இடத்திலேயே வீர மரணம் எய்தினர். ஐந்து பேர் மட்டும் பிழைக்க வைக்கப்பட்டனர்.

**நன்றி :- ஆனந்த விகடன்**

விடுதலைப் புலிகள் இயக்கத்தின் போராட்ட இலட்சியத்துக்காக நான் பட்ட அனுபவங்களில், இதுவே எனது ஆன்மாவை உலுக்கிய மிக வேதனையான சம்பவமாகும். (ஆனந்த விகடன் அடுத்த இதழிலும் அன்ரன் பாலசிங்கத்தின் பேட்டி தொடரும்). □


### பொதுக் கிணறுகளை அமைக்க நடவடிக்கை

(நல்லூர்)


கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராமசேவையாளர் பிரிவில் 3 பொதுக்கிணறுகளை அமைக்க பட்டினிக்கு எதிரான நிறுவனம் முன்வந்துள்ளது.

இதில் இரண்டு கிணறுகள் அமைக்கும் பணிகள் பூர்த்தியடையும் நிலையிலுள்ளதாக அப்பகுதிய கிராமசேவையாளர் தெரிவித்துள்ளார். (த-13)

'உயிர்'
ஸ்ரீகாந்த் – ஷம்ருதா



## அடுத்த விருதுக்குத் தயார்




'ஆட்டோ கிராப்' படத்துக்குத் தேசிய விருது பெற்ற சேரனுக்கு 'தவமாய் தவமிருந்து' படத்துக்கும் விருது கிடைக்கும் என்ற நம்பிக்கை இருக்கிறது. என்றாலும், அடுத்து நவ்யாநாயருடன் ஜோடி சேர்ந்து இயக்கி நடிக்கும் 'ஆடும் கூத்து' படத்தையும் விருதுக்காகவே சேரன் தயாரிக்கிறார்.

இப்போது 'மாயக்கண்ணாடி' படத்திலும் நவ்யாவுடன் சேர்ந்து நடிக்கிறார். 'ஆடும் கூத்து' படத்தின் பிரதியை விருதுக்கு ஆய்வுசெய்யும் குழுவுக்கு அனுப்ப சேரன் முடிவு செய்திருக்கிறார். விருது பற்றிய தகவல் தெரிந்த பிறகே அதை தியேட்டரில் திரையிடத் திட்டமிட்டுள்ளார். அதற்கு முன்பு 'மாயக்கண்ணாடி' 'ரிலீஸ்' ஆகிவிடும் என்கிறார்.

---


'பாரிஜாதம்' படத்தைத் தயாரித்து இயக்கிவரும் பாக்யராஜ் வேறு படங்களில் அப்பா, அண்ணன் முக்கிய பிரமுகர் வேடங்களில் நடிக்க ஒப்புக் கொண்டு வருகிறார். 'ஜெயம்' ரவி - திரிஷா நடிக்கும் 'சம்திங் சம்திங் உனக்கும் எனக்கும்' படத்தில் ஜெயம் ரவியின் அப்பாவாக பாக்கியராஜ் நடிக்கிறார். இவருக்கு ஜோடி சீதா. படத்தில் திரிஷாவின் தோழிகளாக தேஜாஶ்ரீ, ஆட்டோகிராப் மல்லிகா, ரிச்சாபலோட் ஆகியோர் நடிக்கிறார்கள்.



## முன்னுரிமை

'பீமா' படத்தில் விக்ரமுடன் மீண்டும் ஜோடி சேர்ந்துள்ள திரிஷாவுக்கு அடுத்து 'தசவதாரம்' படத்தில் கமலுடன் ஜோடி சேரும் வாய்ப்புக் கிடைத்துள்ளது. இதில் நடிக்க திரிஷா 'ஓகே' சொல்லிவிட்டார் என்றாலும் 'கால்ஷீட்' கொடுப்பது எப்படி என்பது பற்றி முடிவு செய்ய முடியாமல் திணறிக் கொண்டிருக்கிறார். கால்ஷீட் ஒதுக்குவது பற்றி பேச்சு நடைபெறுகிறது.

தெலுங்கில் பிரபுதேவா படங்களுக்குத்தான் திரிஷா முன்னுரிமை கொடுக்கிறாராம். காரணம் கேட்டால்... அவர் கற்றுக்கொடுத்த நடனம்தான் எனக்கு தெலுங்குப் பட உலகில் நல்ல பெயர் வாங்கிக்கொடுத்தது. அவருடன் பணியாற்றிய 3 வருடங்களில்தான் சினிமா பற்றி அதிகம் தெரிந்துகொண்டேன் என்கிறார் திரிஷா.




திருட்டுப் பயலே'
ஜீவன் – சோனியா அகர்வால்



'பட்டாசு'
சிபிராஜ் – சாயாசிங்

## சிம்புவின் ஆசை



சிம்பு இயக்கும் 'வல்லவன்' படம் பற்றி பல்வேறு விமர்சனங்கள் வந்து கொண்டிருக்கின்றன. இதில் நடிக்கும் 3 நாயகிகளும் சிம்புவைப் பற்றியும் அவரது திறமையைப் பற்றியும் பலவிதமாகப் பேசிக்கொண்டிருக்கிறார்கள்.

"இளம் வயதில் இப்படி ஒரு திறமைசாலியைப் பார்த்ததே இல்லை" என்று நயன்தாரா புகழ்கிறார்.

ஆனால் சிம்புவின் ரசனை வேறு மாதிரி இருக்கிறது. 'புதுப்பேட்டை' டிரைலர் பார்த்தது முதல் செல்வராகவனின் தீவிர ரசிர்கர் ஆகியிருக்கிறார். எப்படியும் செல்வராகவனின் இயக்கத்தில் ஒரு படம் நடித்தே ஆக வேண்டும் என்று சபதம் எடுத்திருக்கிறாராம்.

---

'சிவன், கிருஷ்ணன், முருகன்' என்று கடவுள்களின் வேடங்களில் பிரபல நடிகர்கள் தோன்றுவது உண்டு. அந்த வரிசையில் அஜீத்தும் இடம்பிடித்து இருக்கிறார். 'திருப்பதி' படத்தில் ஒரு காட்சியில் முருகனாக வருகிறார் அஜீத்.

சினிமாச்

## கைநழுவிய வாய்ப்பு



ஸ்ரேயா 'சிவாஜி'படத்தில் நடிப்பதில்தான் இப்போது முழுக் கவனம் செலுத்தி வருகிறார். இந்தப் படம் வெளி வந்த பிறகு தனது தகுதி பல மடங்கு உயர்ந்துவிடும் என்ற நம்பிக்கையுடன் இருக்கிறார். சில தெலுங்குப் படங்களில் நடிக்க ஸ்ரேயாவுக்கு அழைப்பு வந்தது.

ஆனால்... இப்போ கால்ஷீட் இல்லை என்று சொல்லி அந்தப் படங்களில் நடிப்பதைக் கைவிட்டு விட்டாராம்.

யார் வந்தாலும் 'சிவாஜி' படம் வெளிவந்த பிறகு பார்க்கலாம் என்கிறாராம்.

---

## மனைவியின் சான்றிதழ்



'தம்பி' படத்தில் சிறப்பாக நடித்தமைக்காக மாதவனை அவரது அப்பா, அம்மா, நண்பர்கள், ரசிகர்கள் எல்லோரும் 'ஆகா ஓகோ' என்று பாராட்டி திக்கு முக்காட வைத்து விட்டார்களாம்.

எல்லாவற்றுக்கும் மேலாக மாதவனின் மனைவி பிரமாதமாக நடித்திருக்கிறீர்கள்.

"இதை... இதைத்தான் நான் எதிர்பார்த்தேன்" என்று நற்சான்றிதழே கொடுத்து விட்டாராம். எப்போதும் அதிகமாக விமர்சனம் செய்யும் மனைவியின் பாராட்டு மாதவனைக் குளிர வைத்துவிட்டதாம்.

## சித்திரம்



'அழகாய் இருக்கிறாய் பயமாய் இருக்கிறது
பரத் – மல்லிகா கபூர்

## அக்ஷன் சிதம்பரம்

'இங்கிலீஷ்காரன்', 'கோவை பிரதர்ஸ்' என்று சத்யராஜுடன் சேர்ந்து காமெடி படங்களை இயக்கித் தயாரித்த ஷக்தி சிதம்பரம் அடுத்து அக்ஷன் படத்தை இயக்குகிறார்.

'பழனி' என்று பெயரிட்டுள்ள இந்தப் புதிய படத்தில் பிரசாந்த் அக்ஷன் ஹீரோவாக நடிக்கிறார். வடிவேலுவும் இவர்களுடன் சேர்ந்து காமெடி கலாட்டா செய்யப்போகிறார்.

# ஆற்றுவாரும் தேற்றுவாரும் இன்றி அல்லற்படும் நாளைய தலைவர்கள்?

## மணற்காடு இடைத்தங்கல் முகாமில் ஒரு பொழுது

''நிலவே நீதான் யாருக்குச் சொந்த மடி...'' என்ற பாடலோடு ஐஸ்கிறீம் வாகனம் இடைத்தங்கல் முகாமிற்குள் நுழைகின்றது

மாபிள் விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்கள் பாடல் ஒலிக்கும் வாகனத்தை உற்றுப்பார்த்த வண்ணம் நிற்கின்றனர். மணற்காடு இடைத்தங்கல் முகாமில் நிழல் மரங்கள் ஒன்று கூட இல்லாத வெப்பப் பிரதேசத்திற்குள் பிரவேசிக்கின்றோம்.

மணற்காடு சென் அன்ரனிஸ் முன்பள்ளியின் தொண்டர் ஆசிரியரான செல்வி மேரி நிர்மலா எங்களை வரவேற்றார். பனை வடலியின் சிறு நிழலில் நின்று கதைத்தோம்... இந்த ஐஸ்பழ வாகனத்தால் நாங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளோம். சுனாமியின் இழப்புக்கள் மனங்களிலிருந்து நீங்கவில்லை. ஆனால் கண்ணுக்குத் தெரியாத பல்வேறு சுனாமிகளின் ஊடுருவல்களால் எமது மக்கள் அலுப்படைந்துள்ளனர். அதில் ஒன்றுதான் அடிக்கடி வரும் இந்த ஐஸ்கிறீம் வாகனம். கிராமசேவகர் ஊடாக நாங்கள் இந்த வாகனம் இடைத்தங்கல் முகாமுக்கு வருவதைத் தடைசெய்யுமாறு பல தடவைகள் கோரியிருந்தோம். பலன் கிடைக்கவில்லை. நாளாந்த் வயிற்றுப் பிழைப்புக்கே திண்டாடும் வாழ்க்கையில்... சிறுவர்கள் அம்மா ஐஸ்கிறீம் ஐஸ்கிறீம்... என்று கதறுகையில் காசில்லாமல் மௌனமாய் கதறும் தாய்மார்கள் இந்த முகாம்களில் உள்ளனர் என்றார். விளையாடிக் கொண்டிருந்த சிறுவர்களை அவதானித்தோம். சிலர் ஐஸ்பழங்களுடன் பெரும்பாலான சிறுவர்கள் ஐஸ்பழங்களை உறுஞ்சுகின்றவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டு நின்றனர். அந்த இடத்தில் வாயூறியபடி நின்ற றெபேட் மெலிசி என்ற சிறுவனோடு உரையாடினோம். அந்தப் பதின்மூன்று வயதுச் சிறுவனின் இடதுபக்கக் காதுப்பகுதியில் பெரும் தழும்பு காணப் பட்டது. சுனாமி வந்தபோது போட் பலகையுடன் மோதுண்ட அடையாளம் என்று அவனே தெரிவித்தான்.

சிறுவர், சிறுமியர்களுக்கு இடைத்தங்கல் முகாம்களில் போஷாக்குக் குறைபாடு,

**செய்திக் கட்டுரை**

சுகாதாரச் சீர்கேடுகள் எதுவும் நிவர்த்தி செய்யப்படாத நிலைமையை விளங்கிக் கொள்ளக் கூடியதாக இருந்தது. இலையான்களும் பெரும்அளவில் பெருகியுள்ளது. மகேஸ்வரன் தினேஸ்(வயது-12) 10.03.2006 அன்று மயக்கமுற்று வீழ்ந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருவதாக மணற்காட்டுத் தகவல்கள் தெரிவிக்கின்றன. சிறுவர்களின் நோய்களுக்கு ஐஸ்பழம் காரணமா என்று ஆராயப்படுகின்றது!

வடமராட்சி J.418 கிராமசேவகர் பிரிவிற்குட்பட்ட மணற்காட்டுச் சிறுவர்களின் கல்வி நலன்களைக் கருத்தில் கொண்டு பெற்றோர் சொந்த நிலத்தில் இருந்து தொழில் செய்ய முடியாது தவிக்கின்றனர். தற்காலிகப் பாடசாலை எப்போது சொந்த இடத்திற்கு மாற்றப்படுகின்றதோ? வீடுகள் அமைத்துக்கு கொடுக்கும் பணிகள் பூர்த்தியாகின்றதோ? அன்றுதான் தமக்கு நிம்மதி ஏற்படும் என்று பி.மனோராச் (வயது- 20) கூறினார்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிற்குட்பட்ட மேற்படி இடைத்தங்கல் முகாமில் 237குடும்பங்கள், 210வீடுகளில் 1475பேர் இவர்களில் 530க்கும் அதிகமானோர் சிறுவர் சிறுமிகள் .நாளாந்தம் வெய்யிலுக்குள்ளும், மழைக்குள்ளும் வாழ்கின்றனர். பிளாஸ்ரிக் கூரைகள் தறப்பாள்கள் வெய்யிலால் முறுகிக் காணப்படுகின்றது. சிறுவர்களுக்கான சத்துணவுகளையோ விளையாட்டு உபகரணங்களோ எந்த நிறுவனமும் உரிய முறையில் வழங்குவதாகத் தெரியவில்லை என்றுதான் மணற்காட்டு முகாம்களில் வாழும் சிறுவர்களின் நலன்கள் திருப்திகரமாக அமைக்கப்படுமோ?

ஐ.நாவின் அறிக்கையின் படி இலங்கையில் 5ஆயிரம் சிறுவர்கள் தாய், தந்தையை இழந்துள்ளனர். இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் என்பர். சுனாமி அனர்த்தம் ஏற்பட்டு 15மாதங்கள் கடந்த நிலையில் இன்றுவரை சிறுவர்களும், பெண்களும் பாதிப்புக்களுக்கு மேல் பாதிப்புக்களைச் சந்தித்து வருகின்றனர்.

சிறுவர்கள் கழுத்துக்களில் செபமாலைகளையும் விரல்களில் ஒன்றுக்கு மேற்பட்ட செபமாலை மோதிரங்களையும் அணிந்திருப்பதை அவதானிக்க முடிகின்றது. இருந்தபோதும் மூடநம்பிக்கைகள் மணற்காட்டுச் சிறுவர்களிடம் பரவலாகக் காணப்படுகின்றது.

ஓர் எடுத்துக்காட்டு: சொந்தங்களை, சொத்துக்களை இழந்த, ஜெயக்கொடி என்ற பெண் மன உளைச்சல் காரணமாக ஆற்றுப்படுத்தலிற்காக பருத்தித்துறையிலுள்ள அருட்தந்தை இருதயதாசிடம் அனுப்பப் பட்டுள்ளார். இந்தச் சம்பவம் சிறுவர்கள் மத்தியில் மோசமான நம்பிக்கைகளை வளர்த்து வருவது அவர்களின் பின்வரும் கூற்றிலிருந்து தெரியவருகின்றது.

''பேய்களைத் துரத்த இதுவரை நாளும் கட்டி வைத்திருந்த தெய்வங்களை யாரோ... அவிட்டு விட்டார்கள் அதுகள் ஆக்களுக்குள்ள புகுந்து இரவில் திரிகின்றன'' எனச் சிறுவர்கள் தெரிவித்தனர்.

இது சம்பந்தமாக 5பிள்ளைகளின் தந்தையாகிய கரைவலைத் தொழிலாளி இருதயநாதன் செபமாலை ராஜஸிடம் கேட்டோம்! இரவுநேரத்தில் இராணுவத்தினரின் ரோந்து நடவடிக்கைகள் முகாம்களிற்கிடையில் நடைபெறுகின்றது. இதனால் இத்தகைய வதந்திகள் பரவியிருக்கலாம். அத்துடன் இரவு 9.30மணியோடு ஜெனரேக்ரரால் வழங்கப்படும் மின்சாரம் நிறுத்தப்படுவதும் ஒரு காரணம் என்றார்.

**ஜோ.ஜெஸ்ரின்**

1மணி 40நிமிடங்களுக்கு மேல் எமது கருத்துப் பரிமாற்றங்கள் நீண்டிருந்தது. திருமதி செபமாலைராஜா எலுமிச்சம்பழ நீர் தந்தார். பருத்தித்துறை முகவரி பொறிக்கப்பட்ட அந்த ஐஸ்பழ வாகனம் மணற்காட்டு இடைத்தங்கல் முகாமை விட்டு வெளியேறி குடத்தனையில் சிறுவர் பாதுகாப்புக் குழுவால் அமைத்துக் கொடுக்கப்பட்ட குடத்தனை சிறுவர் பூங்காப் பகுதியை சென்றடைகின்றது. மணற்காட்டு முகாமை நோக்கி ஐஸ்பழம் விற்கும் சைக்கிள் வியாபாரி மணி அடித்துக்கொண்டு வருகின்றார். ஐஸ்பழம் வாங்குவதற்கு இன்னுமொரு பகுதி சிறுவர்கள் தயாராகினர். □

## பரிசுத்தர் கூட்டமே பதில் சொல்லிச் செல்லு....



குருத்தோலை பிடித்து
குலமகனவர்
குழந்தைபோல் வருகிறார்!

கழுதை மீதமர்ந்து
கடவுளவர்
கருணையுடன் வருகிறார்!

வல்லவரை
வரவேற்று...;

வானவர் கூட்டம்
வாயார வாழ்த்தின
பாதைகள் அவருக்கு
பட்டாடை விரித்தன!

சீயோன் குமாரத்தியே
எருசலேம் பட்டணமே
களிகூர்த்திகு
கம்பீரித்துப்பாடு!

உன் ஆண்டவர்
உன்னிடத்தில் வருகிறார்!

உன்னிடத்தில் வருகிறவர்;
உண்மையுள்ளவர்
நீதியுள்ளவர்
தாழ்மையுள்ளவர்!

தாவீதின் குலத்திற்குத்
தலைமகனானவர்
கருணை மிகுந்த
கருணாமூர்த்தியவர்!

உலகைப் படைத்து-தன்
உயிரையே கொடுத்தவர்
உதிரம் கொடுத்து
துயரம் தீர்த்தவர்!

குவலயம் காக்க
குருதி சிந்தினவர்
இதோ...;

பரமனுடன்
பவனி சென்றவர்
பரிசுத்தம் கண்டார்!
பவனி சென்ற
பரமன் மகனோ...!

பட்டணத்தைப் பார்த்து
கண்ணீர் வடித்தார்!

கடவுளே அழுதாரா...!
எதற்காக அழுதார்...?
ஏன் அழுதார்...?
யாருக்காக...?

கடவுளின்
கண்ணீருக்கும்-சிந்தும்
செந்நீருக்கும் காரணம்...

பரமனுடன்
பவனிபோகும்
பரிசுத்தர் கூட்டமே...!
பதில் சொல்லிச் செல்லு!

**ஜே.பி.ஏ**

## விளையாட்டு பூங்கா திறப்புவிழா

சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் இலங்கையின் அனுசரணையுடன் தெல்லிப்பளை விளையாட்டு பூங்கா திறப்பு விழா இன்று காலை 9.30மணிக்கு அளவெட்டி கும்பலை கிராமத்தில் யாழ்ப்பாண இணைப்பாளர் நன்னடத்தை சிறுவர் பராமரிப்பு சேவைகள் திணைக்களத்தின் தலைவர் க.சிவராஜா தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக திருகோணமலை புனர்வாழ்வு புனரமைப்பு சமூக நலத்துறை அமைச்சின் செயலாளர் வி.எஸ்.சுவாமிநாதனும், சிறப்பு விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலாளர் சு.முரளீதரன், இலங்கை சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் பங்காளிகள் முகாமை உத்தியோகத்தர் ஆர். முகுந்தன், வலி. வடக்கு பிரதேசசபை செயலாளர் ஸ்ரீ.மாணிக்கம், சிறுவர் பராமரிப்பு ஆலோசகர் டேவிற் கிபிரிட்டி ஆகியோரும்,

கௌரவ விருந்தினர்களாக தெல்லிப்பளை பிரதேச செயலகத்தின் நிர்வாக அலுவலர் ப.இராஜகோபாலன், ஜே/217கிராம அலுவலர் என்.இரவீந்திரன் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (க-9)

## முன்னேற்றங்களை வெளிப்படுத்தாத
## பஸ் டிப்போ அதிகாரிகள் விரைவில் பதவிநீக்கம் செய்யப்படுவார்கள்

(கொழும்பு)

மூன்று மாதங்களில் எந்தவிதமான முன்னேற்றங்களையும் வெளிப்படுத்தாத பஸ் டிப்போ அதிகாரிகள் பதவிநீக்கம் செய்யப்படுவார்கள் என்று போக்குவரத்து அமைச்சர் ஏ.எச்.எம்.பௌசி தெரிவித்துள்ளார்.

அனைத்து பஸ் டிப்போக்களினதும் அதிகாரிகளுக்கான செயலமர்வொன்று கடந்த திங்கட்கிழமை மொரட்டுவையில் நடைபெற்றது. இச்செயலமர்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், நான் போக்குவரத்து அமைச்சைப் பொறுப்பேற்று மூன்று மாதங்கள் கடந்த நிலையிலும் இதுவரை போக்குவரத்துச் சபையில் எந்தவிதமான முன்னேற்றமும் இல்லை.

எனவே, செயற்பாட்டுத் திறனை வெளிக்காட்டுவதற்காக பஸ் டிப்போ அதிகாரிகளுக்கு மூன்று மாத காலம் அவகாசம் வழங்குகின்றேன்.

முன்னேற்றங்கள் வெளிகாட்டப்படாவிடின் அனைத்து பஸ் டிப்போ அதிகாரிகளும் பதவிநீக்கம் செய்யப்படுவார்கள்.

நான் போக்குவரத்து அமைச்சை பொறுப்பேற்றபோது, போக்குவரத்துத் துறையில் முன்னேற்றங்கள் ஏற்படலாம் என்று ஊடகங்கள் தெரிவித்தன. ஆனால் என்னால் இன்னும் அதனை நிரூபிக்க முடியாமல் உள்ளது.

சில டிப்போக்களில் ஊழியர்கள் கடமைகளை சரிவரச் செய்யாமல் தொலைபேசி, மின்சாரக் கட்டணங்களை உயர்த்திக் கொண்டிருக்கின்றனர்.

இதேவேளை, முக்கியத்துவமில்லாத காரணங்களை முன்வைத்து சில ஊழியர்கள் வேலை நிறுத்தங்களை மேற்கொள்ள முயற்சிக்கின்றனர்.

அவ்வாறு வேலை நிறுத்தம் மேற்கொள்பவர்களுக்கு இனிவரும் காலங்களில் சம்பளம் வழங்கப்படமாட்டாது.

இதேவேளை, போக்குவரத்துச் சபை ஊழியர்களின் சம்பளப் பிரச்சினைக்கு முறையான தீர்வொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என்றார். (க-9)

## பிரதிமேயரை பதவியிலிருந்து நீக்க நீதிமன்றம் இடைக்காலத் தடை!

(கொழும்பு)

காலி மாநகரசபை பிரதிமேயர் பதவியிலிருந்து பவுஸூல் நியாஸை நீக்குவதற்கு மேன்முறையீட்டு நீதிமன்றம் மே மாதம் 6ஆம் திகதி வரை இடைக்கால தடையுத்தரவு விதித்தது.

தன்னை பிரதிமேயர் பதவியிலிருந்து ஐ.தே.கட்சி நீக்க முடிவு செய்ததற்கு எதிராக பவுஸூல் நியாஸ் தாக்கல் செய்திருந்த மனு கடந்த வியாழக்கிழமை விசாரணைக்கு எடுக்கப்பட்டட போதே இந்த தடையுத்தரவு விதிக்கப்பட்டது.

மேற்படி மனு விசாரணை மேன்முறையீட்டு நீதியரசர்களான எரிக் பஸ்நாயக்க , எஸ்.ஐ.இமாம் ஆகியோர் முன்னிலை யில் ஆராயப்பட்டது. மனுதாரர் சார்பாக சட்டத்தரணி பீடர் ஜெயசேகர மற்றும் கேசர சேனாதீர ஆகியோர்கள் ஆஜரானார்கள்.

தமது கட்சிக்காரர் சார்பாக வாதங்களை முன்வைத்த சட்டத்தரணி பீடர் ஜெயசேகர தமது கட்சிக்காரர் 2006 தேர்தலின் போது ஐ.தே.க பட்டியலில் இடம் கிடைக்காது என்பதால் ஐ.ம.சு கூட்டமைப்பு பட்டியலில் போட்டியிட தீர்மானித்ததாகக் கூறினார். ஆனால் அவர் ஐ.தே.கட்சியிலிருந்து விலகவில்லை எனவும், அவரை எதுவித விசாரணையோ, கால அவகாசமோ இன்றி ஐ.தே.க விலகியுள்ளதாகவும் சட்டத்தரணி கூறினார்.

இந்த வாதங்களை ஏற்ற நீதிமன்றம் காலி மாநகர சபை பிரதிமேயர் பதவியில் இருந்து பவுஸூல் நியாஸ் விலகியதாக வர்த்தமானி அறிவித்தல் வெளியிட்டது.(க-7)

# நிரந்தர விடுதலை வாழ்வுக்கு கட்டளையிட்டருள்க!

தவக்காலப் பயணத்தின் 40 நாட்களை நிறைவு செய்து புனித வாரத்துக்குள் நுழைகின்றோம்.



கரடுமுரடான பாதைகளைக் கடந்து பயணம் செய்யக் கூடிய நல்ல வீதியைக் கண்டதுபோல் பரிசுத்த வாரநாட்களை அனுசரிக்க விரைந்து நடக்கின்றோம். இங்குதான் இயேசுவின் இவ்வுலகப் பயண முடிவுக் கட்டமான இயேசுவின் பாடுகள் மரணம், உயிர்பைத் தியானிக்க இருக்கின்றோம். இயேசுவானவர் ஜெருசலேமுக்குள் நுழையும் வேளை செங்கம்பளங்களை, பட்டாடைகளை விரித்து அவரை இஸ்ராயேலின் அரசன் என்று ஆர்ப்பரித்துப் பாடி, வரவேற்றார்கள். பாடிய வாய்கள் தூற்றத் தொடங்கின. புகழ்ந்த வாய்கள் இகழத் தொடங்கின. அரசனாக வரவேற்றவர்கள் அடுத்த சில நாட்களிலே அவரைக் காட்டிக் கொடுக்கவும் கசை அடி கொடுக்கவும் கைகளை விரித்து சிலுவை மரணத்தை உண்டுபண்ணவும் கங்கணம் காட்டினர். எப்படியெல்லாம் மனிதன் மாறுகின்றான்.மாய உலகில் மயக்கம் கொள்ளுகின்றான்.

### நன்றிப் பண்பு

நன்றி மறந்த நயவஞ்சக உலகிலே பயணித்துக் கொண்டு இருக்கின்றோம்.ஒருவர் செய்த நன்மைகளை சில மணிநேரங்களில் மறந்துவிடுகின்ற நிலை இன்றைய உலகில் காணப்படுகின்றது. ஏறிச் சென்ற ஏணியையே எட்டி உதைத்துவிடும் இழிந்த நிலை பரவிக் கொண்டு வருகின்றது. ஆசானின்றி அறிவு பெற்றவர்களைப் போல் அவமதிக்கும் அன்னியப்பாடு பெருகிவருகின்றது. உண்டவன் வீட்டுக்கே இரண்டகம் செய்யும் கண்முன்னே காணும் அவல நிலையை என்னவென்பது? இப்படித்தான் செய்தார்கள். இயேசுவைப் புகழ்ந்த மக்கள்! அவரிடம் நன்மை பெற்ற கூட்டத்தினர். அவரை அரசன் என்று வாழ்த்தியவர்கள்! அவருக்கு மரண தண்டனை கொடுக்க வேண்டும் என்று கத்திய கூட்டத்தினரின் கைக் கூலிகள் ஆனார்கள்.

### கீழ்ப்படிதல் நிலை

எம்முடைய வாழ்வு உண்மைக்குச் சான்று பகரும் வாழ்வாக இருக்க வேண்டும். சாய்கின்ற பக்கம் சாய்கின்றவர்களாக நாம் எடுபடத் தொடங்கினால் எமது வாழ்வும் பரிதாபகரமானதே. இயேசு சிலுவைச் சாலையே ஏற்கும் அளவுக்கு தந்தையாம் இறைவனுக்கு கீழ்ப்படிந்து நடந்தார்.

## பரமபிதா காட்டிய பாதை

'கிறிஸ்துவின் உண்மைச் சாட்சிகள் மரணத்தில் மட்டுமல்ல ;வாழும்போதே ஒளிர்கின்றனர்' என்று மிக்ரோஸ் என்ற அறிஞர் குறிப்பிடுகின்றார். நம்புவதற்கு கடினமான வாழ்வு நிலைகள் எம்மைப் பின் தொடர்கின்றன. சூழ்நிலைகள் எமக்கு எதிராக இருக்கும்போது கடவுளை நம்புவதே நம்பிக்கையின் உயர்நிலை யாகும். காணமுடியாதவற்றை விசுவாசிப்பதே நம்பிக்கையாகும். நடக்க முடியாதவற்றை ஏற்றுக் கொள்வதே விசுவாசமாகும். எனவே விசுவாசமும் நம்பிக்கையும் ஒன்றை ஒன்று சார்ந்தே உள்ளன.

### நிலையான சமாதானம் மலர

காலங்கடந்த ஒருவர் காலத்துக்கு உட்பட்டவரானார் என்றால் கடவுளின் கீழ்ப்படிதலை என்னவென்பது! மனிதனின் கீழ்ப்படிதலை எந்நிலையில் நோக்குவது? அன்புப் பிரவாகங்கள் அணை கடந்த வெள்ளம் போல பாய வேண்டிய மனித சமுதாயத்தில் குருதி வெள்ளம் ஓடுகின்றது. கொடூரங்கள்மலிந்து காணப்படுகின்றது.

**அன்ரனி பீற்றர்**

முக்திக்கு வழிசொல்லும் முதல்வனே! இத்தவக்கா லத்தில் நாம் மேற்கொண்ட தவ வாழ்வை, ஒறுத்தல் வாழ்வை, நன் முயற்சிகளைக்கண்ணோக்கி எமக்கும் எமது நாட்டுக்கும் நிம்மதியான, நிரந்தரமான விடுதலை வாழ்வைக் கட்டளையிட்டருளும்! எம் மத்தியில் நிலையான சமாதானம் மலரச் செய்தருளும்இறைவா! □

## தீ விபத்து

(கொழும்பு)

கொழும்பு நாரந்தாக் கல்லூரியில் நேற்று முன்தினம் அதிகாலை தீ விபத்து ஏற்பட்டது.

அதிகாலை 3 மணியளவில் இந்த தீ விபத்து ஏற்பட்டதாக பொரளைப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த விபத்தினால் மரத் தளபாடங்களுக்கு பெரும் சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த பொலிஸார்,

தீ விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்பது கண்டறியப்படவில்லை என்று தெரிவித்தார்.

தீ விபத்து குறித்து அறிவிக்கப்பட்டதுடன் 6 தீயணைப்பு வாகனங்கள் அனுப்பப்பட்டு அரை மணி நேரத்திற்குள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டதாக மாநகர தீயணைப்புப் படையினர் தெரிவித்தனர். (சு-9)

## அறிக்கை தயாரிப்பு

(யாழ்ப்பாணம்)

நாலாண்டு காலத் திட்ட அடிப்படையில் உலக வங்கியின் நிதியுதவியுடன் ஆரம்பிக்கப்பட்ட வழுக்கியாறு புனரமைப்புத் திட்டம், ஒன்றரையாண்டு கால வேலைத் திட்டத்தைப் பூர்த்தி செய்துள்ள நிலையில்,

அது பற்றிய சுற்றுச் சூழல் பாதுகாப்பு அறிக்கையொன் றைச் சமர்ப்பிக்குமாறு உலக வங்கி கேட்டுள்ளது.

இதற்கமைய பாக்ர்ஜெயசிங்கம் அப் பிரதேசத்துக்கு விஜயம் செய்து அறிக்கை யொன்றைத் தயாரித்து வருகிறார்.

இந்த அறிக்கையைத் தயார் செய்வதற்கு அவர் பேராசிரியர் நித்தியானந்தம், பேராசிரியர் சண்முகலிங்கன் ஆகியோரது உதவியையும் கோரியுள்ளார் எனத் தெரிகிறது. (து-133)

## கூட இருந்து குழிபறிக்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சிக்கு இல்லை

### என்கிறார் ரவிகருணாநாயக்க எம்.பி

(கொழும்பு)

மக்கள் விடுதலை முன்னணியினரைப் போன்று கூட இருந்து குழி பறிக்கும் எண்ணம் ஐக்கிய தேசியக் கட்சிக்குக் கிடையாது. 24 மணித்தியாலயத்திற்குள் இந்த நாட்டைக் குழப்புவதற்கான நடவடிக்கையை மேற்கொள்ள எம்மால் முடியும்.

ஆனால் நாம் அப்படிப்பட்டவர்கள் இல்லை. நாம் நாட்டை நேசிப்பவர்கள், அவ்வாறு செய்யமாட்டோம் என ஐ.தே.க எம்.பி ரவிகருணாநாயக்க கடந்த வியாழக்கிழமை பாராளுமன்றில் தெரிவித்தார்.

முற்பாதுகாப்பு வழிமுறைகள், சட்டமூலங்கள் மீதான விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில், எதிர்வரும் 19ஆம் திகதிக்குப் பின்னர் நாட்டில் சில மாற்றங்கள் ஏற்படலாம். முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பல கெடுபிடிகளுக்கு மத்தியில், அப்போது பிரதமராகவிருந்த ரணில் விக்கிரமசிங்க விடுதலைப் புலிகளுடன் மேற்கொண்ட உடன்படிக்கையின் காரணமாக ஆயிரக்கணக்கான உயிர்கள் காப்பாற்றப்பட்டன.

எனினும், இப்போது அந்த உடன்படிக்கையைப் பாதுகாக்க அரசாங்கம் உரிய நடவடிக்கையை மேற்கொள்ளத் தவறிவிட்டது.

அரசாங்கம் ஒரு கருத்தினையும் , அரசின் பங்காளிக் கட்சியான ஜே.வி.பி மற்றொரு கருத்தினையும் முன்வைத்து மக்களைக் குழப்பத்தில் ஆழ்த்துகின்றன.

இந்த நிலை மாற்றப்பட வேண்டியது அவசியம். ஜே.வி.பி எம்.பி விமல் வீரவன்ச நோர்வே அனுசரணையை அரசாங்கம் நம்புவதாகத் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு முரண்பாடான சூழ்நிலையில் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் இலங்கையில் முதலீடு செய்ய முன்வருவது எவ்வாறு சாத்தியமாகும்? இணக்கப்பாடுகளை நிறைவேற்றுவதில் அரசாங்கம் இழுத்தடிப்பு செய்யுமானால், புலிகள் யதார்த்தத்தைச் சிந்திப்பதில் தவறில்லை எனவும் அவர் தமதுரையில் மேலும் தெரிவித்தார். (சு-7)

## இராசி பலன்

**09.04.2006**
**(பங்குனி 26 ,ஞாயிற்றுக் கிழமை)**
**ஏகாதசி பிற்பகல் 3.15மணிவரை**
**மகம் பின்னிரவு 2.52மணிவரை**
**இராகுகாலம் 4.37-6.07மணிவரை**
**சுபநேரம் 9.07-10.37மணிவரை**
**குருத்தோலை ஞாயிறு**
**ஏகாதசி விரதம்**

| | |
|---|---|
| மேடம் | வியாபார சிந்தை, அமைதிக்குறைவு, காரிய தாமதம், எதிர்பாராத நன்மை. |
| இடபம் | மாதா சுகம், மனச்சஞ்சலம், காரிய தாமதம்; வீண் ப்கை. |
| மிதுனம் | கூட்டு முயற்சி, போசன சுகம், பிரயாண நன்மை, நண்பர்கள் சந்திப்பு. |
| கடகம் | கடின வார்த்தை, பிறருக்கு உதவுதல், குடும்பக் கவலை, முயற்சி தாமதம். |
| சிங்கம் | ஆழ்ந்த சிந்தை, எதிர்பாராத நன்மை, விருந்துபசாரம், திடீர் பயணம். |
| கன்னி | குடும்ப சுகம், பிரயாணம், முயற்சி தாமதம், சயனசுகக் குறைவு. |
| துலாம் | காரிய சிந்தை, குடும்ப மகிழ்ச்சி, பெருமையடைதல், போசன சுகம். |
| விருச்சிகம் | அதிகாரம், நல்ல செய்தி, தொழில் சிந்தை, காரிய அனுகூலம். |
| தனுசு | புதிய திட்டமிடல், எதிர்பாராத நன்மை, பிரயாணம், முயற்சி தாமதம். |
| மகரம் | மரியாதைக் குறைவு, காரிய தடங்கல், வாகன பயம், போசன சுகம். |
| கும்பம் | களஸ்திர நன்மை, காரிய அனுகூலம், போசன சுகம், செல்வாக்கு. |
| மீனம் | தொழில் சிந்தை, முயற்சி கை கூடும், பொருள் சேர்க்கை, நண்பர்கள் சந்திப்பு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது. -வளவன்

## ஆரம்பக்கல்வி செயலமர்வு

(சாவகச்சேரி)


தென்மராட்சி வலய பாடசாலைகளின் ஆரம்ப கல்வி ஆசிரியர்களுக்கான ஆரம்ப கல்வி செயலமர்வு மீசாலை வீரசிங்கம் மகா வித்தியாலயத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 21, 22ஆம் திகதிகளில் இடம்பெறவுள்ளது. இச் செயலமர்வுக்கு வகுப்பு மாணவர்களின் எண்ணிக்கைக்கேற்ப ஆரம்பக்கல்வி ஆசிரியர்களை அனுப்பி வைக்குமாறு தென்மராட்சி வலயப் பணிப்பாளர் திருமதி.அ.வேதநாயகம் தெரிவித்துள்ளார். (சு-108)

## வழக்குகள் ஒத்திவைப்பு

(ஊர்காவற்றுறை)

கடந்த 5ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த வழக்குகள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (சு-72)







வடக்குக் கிழக்கு வீடமைப்பு அபிவிருத்தித் திட்டம் தொடர்பான பயிற்சிப்பட்டறை யாழ்.மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நேற்றுக் காலை 9மணிக்கு ஆரம்பமானது.

யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் ஆ.சிவசுவாமி நிகழ்வை மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைப்பதையும், பயிற்சிப் பட்டறையில் கலந்துகொண்ட சமூக அபிவிருத்தி உத்தியோகத் தர்கள், தொழில்நுட்ப உத்தியோகத்தர்கள், பிரதேச மட்ட இணைப்பாளர்கள் மற்றும் கிராம மட்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோரையும் படங்களில் காணலாம். (படங்கள்:-எஸ்.ரி.ராஜா)

# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை



### தங்குமிடம் தேடி

12

இங்கிருந்த போது தான் விட் பல்கலைக் கழகத்தில் தேர்வு எழுதி பி.ஏ. பட்டத்தைப் பெற்றார். இங்கிருந்து அலுவலகத்திற்கு ஆப்பிரிக்கர்களுக்கு மட்டும் என்ற பேருந்தில் ஏறிப்போவார். சைடல்ஸ்கி ஒரு கோட்டும் பேண்டும் கொடுத்தார். அதைத்தான் மாற்றிக்கொள்ள முடியாமல் தொடர்ந்து ஐந்தாண்டுகள் அணிந்து வந்தார். அது கிழிந்து தைத்து இறுதியில் ஒட்டுப்போட்ட பகுதியே அதிகமாகி வேடிக்கையான காட்சியாகி விட்டது. சம்பாதித்த சிறு தொகைக்குள் வாழ்க்கை வண்டியை ஓட்ட முடியவில்லை. மெழுகு வர்த்தி பேருந்துக் கட்டணம் எனச் செலவு போக சாப்பாட்டிற்கு மிஞ்சியதில் சாப்பிடப் போதவில்லை. நல்ல வேளையாக வீடு வாடகைக்கு விட்ட சோமா ஞாயிறு தோறும் மண்டேலாவுக்கு விருந்து கொடுப்பார். ஞாயிறு மதியம் அவர்கள் சுடச்சுடக் கொடுத்த பன்றிக் கறியுடன் படைத்த உணவுதான் வாரம் முழுவதும் உயிர் வாழ உதவியது என்கிறார் மண்டேலா.

குனு கிராமத்தில் இருந்த போது உணர முடியாத வறுமையின் கொடுமையை தங்கச் சுரங்கத்தினருகில் அலெக்சாண்டராவில் முழுக்க உணர்ந்தார் மண்டேலா. தன் தையல் போட்ட கிழிந்த கோட்டைப் பலர் பார்த்துச் சிரிப்பதும் வண்டிகளில் தன் பக்கத்தில் உட்காராமல் நகர்ந்து சென்றதையும் அவர் காணாமல் இல்லை.ஆனால் மாற்றிக்கொள்ளத்தான் வழியே இல்லை. யாருக்காகவும் காத்திராமல் காலம் ஓடிக்கொண்டிருந்தது.

ஒரு நாள் சாலையில் காசு இல்லாததால் பேருந்தில் ஏறாமல் நடந்து போய்க் கொண்டிருந்தார் மண்டேலா. ஆறு மைல் நடக்க வேண்டும். எதிரில் ஹாரேயில் தன்னுடன் படித்த மாணவி நடந்து வருவது தெரிந்து இந்தக் கோலத்தில் அவளைப் பார்க்கவேண்டாம் எனக் கருதி சாலையின் மறுபக்கத்துக்குப் போனார். ஆனால் நெல்சன் நெல்சன் என அழைத்துக்கொண்டு ஒரு பெண் ஓடி வந்து மண்டேலாவை நிறுத்தினாள். அவள் பெயர் பிலிஸ் மாசகோ அவரது அலங்கோல உடையையோ வறுமை வாட்டியிருந்த அவரது முகத்தையோ பொருட்படுத்தாமல் தன் வீட்டு முகவரியைக் கொடுத்து அங்கு வருமாறு சொல்லி விட்டுப் போனாள். அவள் வீட்டுக்கு மண்டேலா போனார். எதைப் பற்றியும் பேசாமல் நல்ல உணவு பரிமாறினாள் பல முறை பசியாற்றியவள் அவள்தான்.

ஒரு நாள் மாமிசம் சாப்பிட விரும்பி இருந்த காசுக்கு எதையாவது வாங்கலாம் என நினைத்துக்கடைக்குப் போனவர். கையை நீட்டி நீளச் சதுரமாக இருந்த மாமிசம் பொட்டலத்தைத் தரச் சொன்னார். வாங்கிக் கொண்டு சோமா வீட்டிலிருந்த ஏழுவயதுக் குழந்தையிடம் கொடுத்து இதைச் சமைக்கச் சொல் என்றார். குழந்தை பிரித்துப் பார்த்துவிட்டு சிரித்தது ஏன் சிரிக்கிறாய்? எனக் கேட்ட மண்டேலாவுக்கு இது ஏற்கனவே சமைக்கப்பட்ட 'ஹாம்' என்று கூறிவிட்டுக்குழந்தை ஓடப்பார்த்தது. அந்தப் பெயரை அன்று தான் கேள்விப்பட்டார் மண்டேலா அதுவரை ஹாம் என்றால் என்ன என்பது அவருக்குத் தெரியாது ரொம்ப ருசியாக இருந்தது எனக் குறிப்பிடுகிறார் மண்டேலா.

இந்த வறுமைக்கொடுமைகளுக்கிடையில் பருவத்தின் காரணமாக காதல் முயற்சியில் ஈடுபடாமல் இல்லை தன்னுடன் கீல்ட்டவுனில் படித்த வந்த எல்லன் இம்காபிண்டே என்ற பெண்ணைப் பார்த்தார். அவள் ஜோகன்ஸ்பர்க்கில் ஆசிரியையாகப் பணிபுரிந்து வந்தாள். இருவரும் காதலிக்கத் தொடங்கினர். இவள் சுவாசி இனத்தவள். எனவே பலரும் இது தகாத உறவு எனக் கண்டித்தனர். மண்டேலா இன எல்லைகளைத் தாண்டும் நிலைக்கு இப்போது வளர்ந்திருந்தார். ரெவரண்டு மொபுதோவின் மனைவியும் இதை எதிர்த்தார். என்ன காரணத்தால் தெரியவில்லை சில மாதங்களுக்குப்பிறகு எல்லனுடன் தொடர்பு கொள்ளவே முடியவில்லை அரும்பில் உதிர்ந்தது காதல்.

வீட்டு உரிமையாளர் சோமாவுக்கு ஐந்து பெண்கள் அவர்களில் கடைசிப் பெண் தீதி மிகவும் கவர்ச்சியுடன் இருந்தாள். அவளை மண்டேலா விரும்பினார் அவள் வெள்ளைக் காரர்கள் வீடுகளில் வேலை பார்த்து வந்தாள். அவள் மண்டேலாவுடன் பேசவே இல்லை. அவளை நவீன உடையணிந்த ஒரு இளைஞன் தினந்தோறும் காரில் கொண்டு வந்து விட்டுப் போனான். அவன் தோற்றமே அவன் சில்லுண்டி வேலை செய்பவன் என்பதைக் காட்டியது இது பற்றி எச்சரிக்க மண்டேலா முயன்றார் நடக்கவில்லை.

பல வருடங்களுக்குப் பிறகு நிலைகுலைந்த பெண்ணாக தீதி அந்தப் பையன் மீது வழக்குத் தொடர மண்டேலாவிடம் ஆலோசனை கேட்டுவந்தாள். அவன் ஏமாற்றி விட்டான். அவளுக்காக மண்டேலா வருந்தினார் வழக்குப் போட வருவதாகச் சொல்லிப் போனவள் மீண்டும் வரவே இல்லை.

இவ்வாறு பல பெண்களுடன் காதல் கொள்ள முயன்றதைக் கூறுவதால் பல மலர்களில் தேன் உறுஞ்சிய வண்டு எனக் கருதவேண்டாம். ரோமாபுரி அந்தோனியாக அல்ல தூய்மையுடன் காதலிக்க முயன்றவன் அவ்வளவு தான். வரம்பு மீறி உறவு கொண்டது இல்லை என்கிறார் மண்டேலா.

1941 இல் ரீஜண்ட் ஜோகன்ஸ்பர்க்கிற்கு வருவதாகச் செய்தி வந்தது அவர் தங்கச் சுரங்கத்தில் விருந்தினர் தங்கும் அறையில் தங்கியிருந்தார். அவரைச் சந்திக்கவேண்டியது கடமை எனக் கருதி மண்டேலா போனார். ஆண்டுகள் பல கடந்து விட்டதால் அவர்தோற்றம் வெகுவாக மாறியிருந்தது. அவர் கல்லூரிப் படிப்பை முடிக்காமல் வந்தது பற்றியோ திட்டமிடப்பட்ட திருமணத்தை நடக்க விடாமல் ஓடி வந்தது பற்றியோ எதுவுமே பேசவில்லை. இனிப்பேசிப் பயனில்லை என நினைத்தார் போலும்! ஆனால் மண்டேலா இப்பொழுது என்ன செய்கிறார்? இனி என்ன செய்யப்போகிறார் என்பதைக் கேட்டுத் தெரிந்து கொண்டார். அந்த வழியே மண்டேலா போகட்டும் என விட்டு விட்டார் ஆனால் ஜஸ்டிஸ் பற்றி சிறிது கவலைப்பட்டார். ஜஸ்டிஸ் ஊருக்குத் திரும்பிவிட வேண்டும் என்பதை வற்புறுத்தினார். ஜஸ்டிசோ இங்கு ஒரு பெண்ணுடன் வாழ்ந்து வந்தார். அவளை விட்டுப்பிரிந்து அவர் திரும்புவதாகத் தெரியவில்லை. வற்புறுத்தி விட்டு ரீஜண்ட் ஊருக்கு திரும்பி விட்டார். ரீஜண்டை மீண்டும் சந்தித்தது அரச குடும்பத்துடன் உறவைப் புதுப்பித்துக்கொண்டு மண்டேலாவுக்கு மகிழ்ச்சியாக இருந்தது.

சில வாரங்கள் கழித்து ரீஜண்ட் இறந்து போன செய்தி தந்தி மூலம் வந்தது. இவர்கள் வண்டி பிடித்து ஊர் போய்ச் சேருவதற்குள் இறுதிக் கடன்கள் முடிந்து விட்டன. அம்மாவைப் போல தன்னை வளர்த்த ரீஜண்டின் மனைவியையும் மண்டேலா பார்த்து ஆறுதல் கூறினார் .ஒரு வாரம் அங்கு தங்கி இருந்தார். முக்கேஸ்வேனியில் இளமைக் கால நினைவுகள் வந்தன. (தொடரும்)



## துவக்கால சிந்தனை

### என் இறைவா என் இறைவா ஏன் என்னைக் கைவிட்டீர்

காலமெல்லாம் கடந்த ஒருவர், காலத்திற்குள் உட்பட்டவரானார். எல்லை எல்லாம் கடந்த ஒருவர் எல்லைக்குள் உட்பட்டவரானார். இம்மண்ணில் உள்ள ஒவ்வொரு உயிரினத்திற்கும், செயலுக்கும் ஒரு முடிவு காலம் உண்டு என்றாலும், இறைமக்களையும் அது விட்டுவைக்கவில்லை. இவ்வுலகில் 33 ஆண்டு காலம் அவர் வாழ்ந்த வாழ்வை இந்த மூன்று மணி நேர வாழ்க்கை அர்த்தப்படுத்தியது. இயேசுவின் 3 வருட பொது வாழ்க்கையில் வேதனைக் காற்று அவரைத் தொட்டிருந்தாலும், உண்மையான உடல் வேதனை எருசலேம் நுழைவிற்கு பிறகே ஆரம்பித்தது. பிலாத்து, இயேசுவின் குற்றமற்ற நிலையை உணர்ந்திருந்தும் தனது கோழைத்தனத்தினாலும், பதவியின் மீதுள்ள பற்றினாலும் மதக் கோட்பாடுகளுக்கு எதிராக இயேசுவிற்கு மரணத்தீர்ப்பு கொடுக்கிறான். இது மனித வரலாற்றிலேயே அபத்தமாய் அளிக்கப்பட்ட தீர்ப்பு. அதனால்தான் இயேசுவின் இறப்பிற்கு இயற்கைகூட தன் காரிருளால் கண்டனம் தெரிவித்தது. இயேசுவின் இறப்பில் நிகழ்ந்த 2 நிகழ்ச்சிகள். 1) கோவில் திரை கிழிந்தது - இது கடவுள் தமக்கு மட்டுமே உரித்தான சொத்து என்ற யூதர்களின் பாரம்பரிய கோட்பாட்டிற்கு ஒரு முற்றுப்புள்ளி 2) நூற்றுவர் தலைவனின் இவர் உண்மையாகவே கடவுளின மகன் என்ற விசுவாச அறிக்கை, யூதர்களால்தாழ்ந்தவர்கள் எனக் கருதப்பட்டவர்கள் கூட இயேசுவை ஏற்றுக் கொண்டனர் என்பதை விளக்குகிறது. நாமும் இறைவன் அனைவருக்கும் சொந்தம் என்பதை அறிக்கையிடுவோம். இயேசுவை நாம் வாழும் சூழலில் மீட்பராக அறிமுகப்படுத்துவோம்.

காவலன்

## இந்த ஆண்டில்

# 4 இலட்சம் இளைஞர் யுவதிகளுக்கு வேலைவாய்ப்பு வழங்க நடவடிக்கை

(கொழும்பு)

வெளிநாட்டு வேலைவாய்ப்பை மையமாகக் கொண்டு விரைவில் புதிய தாதியர் பயிற்சி நிலையம் நிறுவப்பட்டு பயிற்சி வழங்கப்படவுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர் அதாவுட செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பணியகத்தில் இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் அங்கு தொடர்ந்து பேசுகையில், இந்த வருடத்தில் 4 இலட்சம் இளைஞர், யுவதிகளுக்கு வெளிநாட்டில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது. இவற்றில் 2 இலட் சம் இளைஞர்களுக்கு மலேசியாவில் வேலை வாய்ப்பை பெற்றுக் கொடுக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

அத்துடன் வெளிநாட்டு வேலை வாய்ப்புப் பெற்றுச் செல்வோரின் குடும்பங்களின் நலன்களைக் கவனிப்பதற்காக புதிய திட்டமொன்று விரைவில் அமுல்படுத்தப்படவுள்ளது என்றும் கூறினார். (க-9)


அமரர் திரு சி. அரியகுட்டி அவர்கள் நினைவாக
புத்தூர் வீனஸ் விளையாட்டுக்கழகம் கலையகம் ச.ச.நிலையம்
இணைந்து நடாத்தும் மாவட்ட ரீதியிலான
கரப்பந்தாட்டச் (செற்-அப்) சுற்றுப்போட்டி-2006

பங்குபற்றும் கழகங்கள்

A பிரிவு
01.மத்திய வி.க.(ஆவரங்கால்)
02.வளர்மதி வி.க.(மட்டுவில்)
03.விக்னேஸ்வரா வி.க.(B) (அச்சுவேலி)

B பிரிவு
01.இந்து இளைஞர் வி.க.(ஆவரங்கால்)
02.கலைமதி வி.க.(B) (புத்தூர்)
03.ஐக்கிய வி.க.(காங்கேசன்துறை)

C பிரிவு
01.விக்னேஸ்வரா வி.க.(A ) அச்சுவேலி
02.பாரதி வி.க.(நாயன்மார்கட்டு)
03.மோகனதாஸ் வி.க (மட்டுவில்)

D பிரிவு
01.ஐக்கிய விளையாட்டுக் கழகம் (அரியாலை)
02.கலைமதி வி.க.(A) (புத்தூர்)
03.அண்ணா வி.க (தொண்டமனாறு)

கால அட்டவணை

| | | | |
|---|---|---|---|
| 10.04.2006 | பி.ப. | 4.00 | வளர்மதி வி.க. எதிர் விக்னேஸ்வரா வி.க.(B) |
| | பி.ப. | 4.45 | இந்து இளைஞர் வி.க. எதிர் கலைமதி வி.க.(B) |
| 11.04.2006 | பி.ப. | 4.00 | விக்னேஸ்வரா வி.க.(A ) எதிர் பாரதி வி.க. |
| | பி.ப. | 4.45 | கலைமதி வி.க.(A) எதிர் அண்ணா வி.க |
| 12.04.2006 | பி.ப. | 4.00 | ஐக்கிய வி.க.(அரியாலை) எதிர் கலைமதி வி.க(A) |
| | பி.ப. | 4.45 | ஐக்கிய வி.க.(காங்கேசன்துறை) எதிர் கலைமதிவி.க.(B) |
| 13.04.2006 | பி.ப. | 4.00 | விக்னேஸ்வரா வி.க. ( A) எதிர் பாரதி வி.க |
| | பி.ப. | 4.45 | மத்திய வி.க. எதிர் விக்னேஸ்வரா வி.க(B) |
| 14.04.2006 | பி.ப. | 4.00 | ஐக்கிய வி.க. (அரியாலை) எதிர் அண்ணா வி.க |
| | பி.ப | 4.45 | ஐக்கிய வி.க. (காங்கேசன்துறை) எதிர் இந்து இளைஞர் வி.க |
| 15.04.2006 | பி.ப. | 4.00 | மத்திய வி.க. (ஆவரங்கால்) எதிர் வளர்மதி வி.க |
| | பி.ப | 4.45 | விக்னேஸ்வரா வி.க.( A) எதிர் மோகனதாஸ் வி.க |
| 16.04.2006 | பி.ப. | 4.00 | A பிரிவு வெற்றியாளர் எதிர் D பிரிவு வெற்றியாளர் |
| | பி.ப | 4.45 | B பிரிவு வெற்றியாளர் எதிர் C பிரிவு வெற்றியாளர் |
| 17.04.2006 | பி.ப. | 4.00 | A பிரிவு வெற்றியாளர் எதிர் C பிரிவு வெற்றியாளர் |
| | பி.ப | 4.45 | B பிரிவு வெற்றியாளர் எதிர் D பிரிவு வெற்றியாளர் |
| 18.04.2006 | பி.ப. | 4.00 | A பிரிவு வெற்றியாளர் எதிர் B பிரிவு வெற்றியாளர் |
| | பி.ப | 445 | C பிரிவு வெற்றியாளர் எதிர் D பிரிவு வெற்றியாளர் |

குறிப்பு:- போட்டியின் இறுதியில் புள்ளி அடிப்படையில வெற்றி பெற்ற இரண்டு கழகங்கள் இறுதிப் போட்டிக்கு தெரிவு செய்யப்படும். இறுதிப்போட்டி பற்றிய விபரங்கள் பின்னர் அறிவிக்கப்படும்.

போட்டிகள் யாவும் வீனஸ் வி.க.மைதானத்தில் நடைபெறும்

ஊடக அனுசரணை : வலம்புரி-சங்குநாதம்

ICC சர்வதேச கிரிக்கெற் சபை ICC

INTERNATIONAL CRICKET COUNCIL

24

# சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டி - பந்துவீச்சு



வஸீம் அக்ரம் வக்கார் யூனிஸ் முத்தையா முரளிதரன்

**போ**ட்டியொன்றில் சிறப்பான பந்து வீச்சு அதாவது போட்டியில் அதிக விக்கெற்றுக்களைக் கைப்பற்றிய பந்துவீச்சாளர்களை நோக்குவோம்.

இவ்வரிசையில் முதல் இடத்தில் இருப்பவர் இலங்கையணியின் உபதலைவரும், ஆரம்ப வேகப்பந்து வீச்சாளருமான சமிந்தவாஸ்.

சிம்பாவே அணிக்கெதிரான போட்டியில்19 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெற்றினை வாஸ் வீழ்த்தினார்.

சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியின் 1776ஆவது போட்டியாக கொழும்பு எஸ்.எஸ்.சி மைதானத்தில் எல்.ஜி.கிண்ணத்துக்கான போட்டியில் இலங்கை-சிம்பாவே அணிகள் மோதின.

இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய சிம்பாவே அணி சமிந்தவாஸின் பந்துவீச்சினால் நிலைகுலைந்து 38 ஓட்டங்களைப் பெற்றது.

சிறப்பாகப் பந்துவீசிய வாஸ் 9 ஓவர்கள் பந்துவீசி 3 மெய்டின்கள் அடங்கலாக 19 ஓட்டங்களைக் கொடுத்து 8 விக்கெற்றினை வீழ்த்தினார்.

இதன்மூலம் சர்வதேச கிரிக்கெற் வரலாற்றில் தனக்கென சிறப்பான பந்துவீச்சுப் பெறுமதியினைப் பெற்றுக்கொண்டதோடு இதுவரை காலமும் (8-12-2001) சர்வதேச ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் சிறப்பான பந்துவீச்சுப் பெறுமதியாகவிருந்த முரளிதரனின் 30 ஓட்டங்களுக்கு 7 விக்கெற் என்ற நிலையினை மாற்றியமைத்து புதிய சாதனையைப் படைத்தார்.

இதேவேளை இப்போட்டியில் குறிப்பிடத்தக்க விடயம் என்னவெனில் சிம்பாவே அணி வீரர்கள் மூவரின் விக்கெற்றுக்களை (கார்லிஸ், விஷாட், தைபு) வீழ்த்தியதன் மூலம் ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் ஹட்ரிக் சாதனை படைத்த14 வீரர்களில் ஒருவரானார்.

இப்போட்டியில் 38 ஓட்டங்களைப் பெற்ற சிம்பாவே அணியினரின் ஒருவீரர் மட் டுமே இரட்டை இலக்கத்தினைத் தாண்டினார். அத்துடன் 5 பேர் ஓட்டமெதுவும் பெறாமல் ஆட்டமிழந்தமை குறிப்பிடத்தக்கது.

அத்துடன் இப்போட்டியில் இலங்கையணி 9 விக்கெற்றினால் வெற்றிபெற்றதோடு போட்டியின் ஆட்ட நாயகனாக சமிந்த வாஸ் தெரிவுசெய்யப்பட்டார்.

## போட்டியில் சிறப்பான பந்துவீச்சு

வாஸுக்கு அடுத்தபடியாக இரண்டாம் இடத்தில் இருப்பவர் அவுஸ்திரேலிய அணியின் வேகப்பந்துவீச்சாளர் கிளென் மெக்ரா.

2003ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக் கிண்ணப் போட்டியில் நமீபியா அணிக்கெதிரான போட்டியில் மெக்ரா தனது சிறப்பான பந்துவீச்சினை வெளிப்படுத்தினார்.

மெக்ரா தனது சிறப்பான பந்துவீச்சின் மூலம் நமீபியா அணியை 45 ஓட்டங்களுக்குள் சுருட்டிய அவுஸ்திரேலிய அணி 256 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 301 ஓட்டங்களைப் பெற்றது. பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய நமீபியா 45 ஓட்டங்களுக்குள் சகல விக்கெற்றுக்களையும் இழந்தது. சிறப்பாகப் பந்துவீசிய மெக்ரா 7 ஓவர் கள் பந்துவீசி 4 மெய்டின்கள் அடங்கலாக 15 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெற்றினை வீழ்த்தினார்.

போட்டியின் ஆட்டநாயகனாகத் தெரிவு செய்யப்பட்ட மெக்ரா, ஒருநாள் கிரிக்கெற் போட்டியில் சிறப்பான பந்துவீச்சுப் பெறுமதியினை வெளிப்படுத்தியவர்களின் வரிசையில் இரண்டாவது வீரரானார். இவருக்கு அடுத்தபடியாக அவுஸ்திரேலிய அணியின் அன்ரி பிச்செல் உள்ளார்.

இங்கிலாந்து அணிக்கெதிராக 2003 ஆம் ஆண்டு உலகக் கிண்ணப் போட்டியில் - அதாவது ஒருநாள் கிரிக்கெற் போட்டியின் 1976ஆவது போட்டியாக நடைபெற்ற போட்டியில் - பிச்செல் தனது திறமையினை வெளிப்படுத்தினார்.

பலமான நிலையில் இருந்த இங்கிலாந்து அணியினை அவுஸ்திரேலிய அணி எதிர்கொண்டது. பிச்செல்லின் சிறப்பான பந்து வீச்சின்மூலம் இங்கிலாந்து அணி 8 விக்கெற்றினை இழந்து 204 ஓட்டங்களைப் பெற்றது.

தனது சிறப்பான பந்துவீச்சினை வெளிப்படுத்திய பிச்செல் 10 ஓவர்கள் பந்துவீசி 20 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெற்றுக்களை வீழ்த்தினார்.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய அணி 8 விக்கெற்றினை இழந்து 208 ஓட்டங்களைப் பெற்று வெற்றிபெற்றது.

இப்போட்டியின் சிறப்பான பந்துவீச்சுப் பெறுமதியினை வெளிப்படுத்திய பிச்செல் ஆட்டநாயகனாகத் தெரிவுசெய்யப் பட்டார்.

பிச்செல்லுக்கு அடுத்தபடியாக இலங்கையணியின் நம்பிக்கை நட்சத்திரம், சுழற்பந்து வீச்சாளருமான முத்தையா முரளிதரன் உள்ளார்.

சார்ஜா கிண்ணத்துக்காக 2000 ஆம் ஆண்டு இந்திய அணிக்கெதிராக நடைபெற்ற போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கையணி அத்தப்பத்து (102) மற்றும் ஜெயவர்த்தன (128) ஆகியோரின் சிறப்பான துடுப்பாட்டத்தின் மூலம் 294 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய இந்திய அணி சிறப்பாக விளையாடினாலும் முரளிதரனின் சிறப்பான பந்துவீச்சினால் நிலைகுலைந்து 226 ஓட்டங்களைப் பெற்று 68 ஓட்டங்களால் தோல்வியடைந்தது.

### நோயல்

சிறப்பான பந்துவீச்சினை வெளிப்படுத்திய முரளிதரன் 10 ஓவர்கள் பந்துவீசி ஒரு மெய்டின் அடங்கலாக 30 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7விக்கெற்றினை வீழ்த்தினார்.

இதன்மூலம் போட்டியின் ஆட்டநாயகனாக முரளிதரன் தெரிவுசெய்யப்பட்டார்.

இதேவேளை இவ்வரிசையில் முரளிதரனுக்கு அடுத்தபடியாக 5ஆம் இடத்தில் இருப்பவர் பாகிஸ்தான் அணியின் முன்னாள் தலைவரும் வேகப்பந்து வீச்சாளருமான வக்கார் யூனிஸ்.



சமிந்தவாஸ் கிளென் மெக்ரா அன்றூ பிச்செல்

பாகிஸ்தான் அணியின் நம்பிக்கை நட்சத்திரமாகவும் உலகின் தலைசிறந்த பந்து வீச்சாளராகவும் வலம்வந்த வக்கார் யூனிஸ் இங்கிலாந்து அணிக்கெதிராக 17 ஜூன் 2001 நடைபெற்ற நட்வெஸ்ட் தொடருக்கான போட்டியில் தனது சிறப்பான பந்துவீச்சின் மூலம் பாகிஸ்தான் அணியினை வெற்றிப் பாதைக்கு இட்டுச் சென்றார்.

ஒருநாள் கிரிக்கெற் போட் டியின் 1724 ஆவது போட்டியாக நடைபெற்ற இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கிலாந்து அணிவக்கார் யூனிஸின் பந்து வீச்சினால் நிலைகுலைந்து 156 ஓட்டங்களுக்கு தனது சகல விக்கெற்றுக்களை இழந்தது. சிறப்பான பந்துவீச்சினை வெளிப்படுத்திய வக்கார் 10 ஓவர்கள் பந்து வீசி 36 ஓட்டங்களை விட்டுக்கொடுத்து 7 விக்கெற்றினை வீழ்த்தினார்.

இப்போட்டியில் பாகிஸ்தான் அணி இலகுவாக வென்றது. இப்போட்டியின் ஆட்டநாயகனாக வக்கார் தெரிவுசெய்யப்பட்டார்.

இவர்களுக்கு அடுத்தபடியாக

ஏ.ஜாவிட் (பாக்.) - 7/37
டபிள்யூ. டேவிஸ் (மேற்இந்.) - 7/51
அனில் கும்ளே (இந்) - 6/12
ஜி.கில்மோர் (அவுஸ்) - 6/14
இம்ரான் கான் (பாக்) - 6/14.



'வசந்தம்வீசுமா' (சமிந்த வாஸ்)

## வருடத்தில் அதிக விக்கெற்

| | ஆண்டு | போட்டி | வீசிய பந்துகள் | ஓட்டமற்ற ஓவர் | ஓட்டம் | விக்கெற் | சராசரி |
|---|---|---|---|---|---|---|---|
| சக்லைன் முஷ்தக் (பாக்.) | 1997 | 36 | 1886 | 17 | 1293 | 69 | 18.73 |
| சக்லைன் முஷ்தக் (பாக்.) | 1996 | 33 | 1734 | 12 | 1269 | 65 | 19.52 |
| ஷேன் வோர்ன் (அவுஸ்.) | 1999 | 37 | 1975 | 27 | 1443 | 62 | 23.27 |
| அப்துல் ரஸாக் (பாக்.) | 2000 | 38 | 1889 | 22 | 1370 | 61 | 22.45 |
| அனில் கும்ளே (இந்.) | 1996 | 32 | 1825 | 16 | 1235 | 61 | 20.24 |
| ஷோன் பொலக் (தென் ஆபி.) | 2000 | 38 | 1989 | 28 | 1319 | 61 | 21.62 |
| வக்கார் யூனிஸ் (பாக்.) | 1996 | 35 | 1721 | 17 | 1348 | 60 | 22.46 |
| அஜித் அகர்கர் (இந்.) | 1998 | 30 | 1613 | 13 | 1378 | 58 | 23.75 |
| முத்தையா முரளிதரன்(இல.) | 2001 | 33 | 1851 | 29 | 1019 | 56 | 18.19 |
| ஷோன் பொலக் (தென் ஆபி) | 2002 | 38 | 1997 | 33 | 1274 | 54 | 23.59 |
| கிளென் மெக்ரா (அவுஸ்.) | 1999 | 27 | 1450 | 20 | 983 | 52 | 18.90 |
| வக்கார் யூனிஸ் (பாக்.) | 2002 | 36 | 1699 | 24 | 1424 | 52 | 27.38 |
| அலன் டொனால்ட் (தென் ஆபி) | 1996 | 20 | 1102 | 5 | 787 | 51 | 15.43 |
| பிரெட்லீ (அவுஸ்.) | 2005 | 26 | 1355 | 23 | 1017 | 51 | 19.94 |
| மகாயா நிற்னி (தென் ஆபி) | 2002 | 31 | 1676 | 32 | 1196 | 50 | 23.92 |

## அதிக (மொத்த) விக்கெற்றுக்கள்

| | போட்டி | வீசிய பந்துகள் | ஓட்டமற்ற ஓவர் | ஓட்டம் | விக்கெற் | சராசரி | சிறப்பம்சம் | 4விக். | 5விக். |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| வஸீம் அக்ரம் (பாக்.) | 356 | 18186 | 238 | 11812 | 502 | 23.52 | 5-15 | 17 | 6 |
| வக்கார் யூனிஸ் (பாக்.) | 262 | 12698 | 143 | 9919 | 416 | 23.84 | 7-36 | 14 | 13 |
| முத்தையா முரளிதரன் (இல.) | 273 | 14949 | 175 | 9587 | 414 | 23.15 | 7-30 | 10 | 8 |
| சமிந்தவாஸ் (இல.) | 275 | 13533 | 234 | 9491 | 352 | 26.96 | 8-19 | 9 | 4 |
| ஷோன் பொலக் (தென் ஆபி.) | 259 | 13486 | 257 | 8456 | 348 | 24.29 | 6-35 | 11 | 4 |
| கிளென் மெக்ரா (அவுஸ்.) | 221 | 11563 | 260 | 7425 | 331 | 22.43 | 7-15 | 9 | 7 |
| அனில் கும்ளே (இந்.) | 264 | 14117 | 106 | 10122 | 329 | 30.76 | 6-12 | 8 | 2 |
| ஜவகல் சிறிநாத் (இந்.) | 229 | 11935 | 137 | 8847 | 315 | 28.08 | 5-23 | 7 | 3 |
| ஷேன் வோர்ன் (அவுஸ்.) | 194 | 10642 | 110 | 7541 | 293 | 25.73 | 5-33 | 12 | 1 |
| சக்லைன் முஷ்தக் (பாக்.) | 169 | 8770 | 66 | 6275 | 288 | 21.78 | 5-20 | 11 | 6 |
| சனத் ஜெயசூர்யா (இல.) | 357 | 12636 | 38 | 10053 | 273 | 36.82 | 6-29 | 6 | 4 |
| அலன் டொனால்ட் (தென் ஆபி.) | 164 | 8561 | 101 | 5926 | 272 | 21.78 | 6-23 | 11 | 2 |
| கபில் தேவ் (இந்.) | 225 | 11202 | 235 | 6945 | 253 | 27.45 | 5-43 | 3 | 1 |
| கீர்த் ஸ்ரீக் (சிம்.) | 189 | 9468 | 114 | 7129 | 239 | 29.82 | 5-32 | 7 | 1 |
| அஜித் அகர்கர் (இந்.) | 155 | 7679 | 79 | 6554 | 238 | 27.53 | 6-42 | 9 | 2 |

மனோதைரியம் இழந்தாலன்றி எவரையும் எந்தக் காலத்தும் உண்மையிலேயே தோற்கடிக்கப்பட்டான் என்று கூறஇயலாது.

-ஆவ்பரி

வலம்புரி

# படுகொலைச் சம்பவங்கள் சமாதானத்தைச் சீர்குலைக்கும்

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் தமிழ் மக்கள் மத்தியில் பெரும் அச்சத்தை ஏற்படுத்தியுள்ளது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தை நடந்து அடுத்த சுற்றுப் பேச்சுக்கான ஆயத்தப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வரும் வேளையில் திருகோணமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

காலஞ்சென்ற மட்டக்களப்பு மாவட்டத்தின் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் இடத்திற்கு விக்னேஸ்வரன் நியமிக்கப்பட்டிருந்தார்.

பாராளுமன்ற உறுப்பினராகவிருந்த ஜோசப் பரராஜசிங்கம் கடந்த ஆண்டு நத்தார் தின த்தன்று தேவாலய வழிபாட்டில் ஈடுபட்டிருந்த போது இனந்தெரியாத ஆயுததாரிகளால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இப்போது அவரின் இடத்திற்கு நியமிக்கப்பட்டிருந்த விக்னேஸ்வரனும் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

தமிழ்ப் பிரதேசங்களில் அண்மைக்காலமாக இடம்பெற்றுவந்த படுகொலைச் சம்பவங்கள் ஜெனீவாப் பேச்சுவார்த்தைக்குப் பின்னர் தணிவடைந்திருந்த போதிலும் தற்போது அவை மீண்டும் தலை தூக்கி விட்டன என்பதற்கு விக்னேஸ்வரனின் படுகொலை எடுத்துக் காட்டாகவுள்ளது.

ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் எட்டப்பட்ட முடிபுகளை அமுல்படுத்தாதவரை இத்தகைய கொலைச் சம்பவங்கள் தொடரப் போவது உறுதி.

துணை ஆயுதக் குழுக்களிடம் இருந்து ஆயுதங்களைக் களைய வேண்டும் என்ற கோரிக்கை விடுதலைப்புலிகளால் முன்வைக்கப்பட்டது.

இதனை ஜெனீவாப் பேச்சுவார்த்தையில் கலந்து கொண்ட அரச தரப்பு ஏற்றுக் கொண்ட போதிலும், இராணுவத் தரப்போ, துணை ஆயுதக்குழுக்கள் பற்றி எதுவுமே தமக்குத் தெரியாது எனவும் அப்படியான குழுக்கள் இராணுவத்தில் இல்லை எனவும் கூறுகின்றனர்.

அதேநேரம் ஜே.வி.பி., ஹெலஉறுமய போன்ற இனவாதக் கட்சிகளோ துணை ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களைக் களையக் கூடாது எனக் கூறி வருகின்றன. இங்கே தான் இரட்டை வேடம் அம்பலமாகின்றது.

அதாவது, ஆயுதக் குழுக்கள் எதுவும் இல்லையென இராணுவத் தரப்புக் கூற ஜே.வி.பியோ ஆயுதக் குழுக்களிடமிருந்து ஆயுதங்களை களையக் கூடாது என கூறுகின்றதெனில் இரு கருத்துக்களுமே முரண்பாடானதென்பது தெளிவு.

எதுவாயினும் சமாதான முயற்சிகள் வெற்றி தர வேண்டுமாயின் இனந்தெரியாத படுகொலைகள் நிறுத்தப்பட வேண்டும்.

முத்திரைகள், தொலைத் தொடர்பு சாதனங்களைக் கொண்டு

# மாபெரும் நூதனசாலையொன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை!

(கொழும்பு)

நாட்டில் பாவனைக்கு உட்படுத்தப்பட்ட முத்திரைகள் மற்றும் தொலைத்தொடர்பு சாதனங்களைக் கொண்டு மாபெரும் நூதனசாலையொன்றை அமைக்க அரசாங்கம் நடவடிக்கை எடுத்துள்ளது.

இன்னும் இரண்டுமாத காலங்களினுள் தபால் திணைக்களத்தின் தலைமையகத்தில் இந்த நூதன சாலையை நிறுவுவதற்கான சகல ஏற்பாடுகளும் துரித கதியில் மேற்கொள்ளப்பட்டு வருவதாக தபால் தொலைத் தொடர்புகள் மற்றும் கிராமிய பொருளாதார அபி விருத்தி அமைச்சர் தி.மு.ஜயரத்ன தெரிவித்தார்.

தபால் தொலைத் தொடர்புகள் அமைச்சினால் கடந்த வியாழக்கிழமை நடாத்தப்பட்ட செய்தியாளர் மாநாட்டில் கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு கூறினார்.

இன்று மனிதனின் அத்தியாவசிய தேவைகளில் ஒன்றாக தொலைத் தொடர்புகளும் கருதப்படுகிறது.

நாளுக்கு நாள் முன்னேறி வரும் தொழில்நுட்பம் காரணமாக தொலைத்தொடர்பில் பாரிய முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது.

கடந்த வருடம் எமது நாட்டில் தொலைத்தொடர்புகள் அமைச்சு பாரிய முன்னேற்றம் கண்டுள்ளது. இந்நிலையில் எமது நாட்டுக்கு வரும் உல்லாசப் பயணிகள், இங்கே தங்கியிருக்கும் வெளிநாட்டவர்கள், பாடசாலை மாணவர்கள் , எமது நாட்டின் தபால் மற்றும் தொலைத்தொடர்பின் படிப்படியான முன்னேற்றங்களை அறிந்து கொள்வது மிக அவசியமாகும்.

இதற்காகவே இந் நூதனசாலை அமைக்கப்படவுள்ளது. இதேவேளை, இவ் வருட இறுதிக்குள் 7 இலட்சத்து 30 ஆயிரம் பேருக்கான தொலைபேசி இணைப்புகள் பெற்றுக்கொடுக்கப்படும்.

தொலைபேசி இணைப்பிற்காக காலையில் விண்ணப்பித்ததும் மாலையில் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் நாம் தற்போது பல ஒப்பந்தங்களை மேற்கொண்டு வருகிறோம்.

நாளடைவில் சகல நாடுகளுடனும் இலகுவில் தொடர்பு கொள்ள 3P தொழில்நுட்பமும் இலங்கையில் அறிமுகப் படுத்தி வைக்கப்படவுள்ளது என்று அமைச்சர் ஜயரத்ன மேலும் குறிப்பிட்டார். (க-7)

# புலிகளை பேச்சு மேசையிலிருந்து விலகச்செய்யும் முயற்சியே விக்னேஸ்வரனின் படுகொலை

## கஜேந்திரன் எம்.பி சுட்டிக்காட்டு

(கொழும்பு)

ஜெனீவாப் பேச்சுக்களிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளை விலகச் செய்யும் முயற்சியாக திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார் என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.



இப் படுகொலை தொடர்பாக அவர் கருத்து தெரிவிக்கையில்,

திருகோணமலையில் தான் பணியாற்றும் இலங்கை வங்கிக்குள் நுழைந்த போது விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியலில் பாராளுமன்ற உறுப்பினராக விக்னேஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ள நிலையில் இப் படுகொலைச் சம்பவம் நடந்துள்ளது. இவர் திருமலையில் சிங்களப் பேரின வாதிகளின் இன வெறி ஆக்கிரமிப்புக்கு எதிராகவும் சிங்கள இன வெறிக் காடையர்களின் தமிழ் மக்களுக்கு எதிரான நடவடிக்கைகளைக் கண்டித்தும் துணிச்சலாகக் குரல் கொடுத்து வந்தவர்.

அது மட்டுமன்றி திருமலையில் நடைபெறுகிற நிலப்பறிப்பு மற்றும் ஆக்கிரமிப்பு நடவடிக்கைகளைக் கண்டித்து துணிச்சலோடு குரல் கொடுத்து தமிழ்த் தேசியத்துக்காக மிகவும் கடுமையாக உழைத்தவர். உள்ளூராட்சி சபைத் தேர்தலில் கூட்டமைப்பினர் திருமலையில் வெற்றிபெறுவதற்காக கடுமையாக உழைத்தவர்.

இத்தகைய நபர் பாராளுமன்றத்துக்குள் உள்நுழைந்து விடக் கூடாது என்பதற்காக இராணுவப் புலனாய்வுத்துறையும் அவர்களோடு சேர்ந்தியங்கும் துணை இராணுவக் குழுவினரும் படுகொலை செய்துள்ளனர்.

இக்கொடூரக் கொலையை நாம் வன்மையாகக் கண்டிக்கிறோம். இதனை அரசாங்கத்தின் திட்டமிட்ட இப் படுகொலை என்று தான் கூறவேண்டும்.

இக்கொலைகள் மூலம் எமது தமிழ்த் தேசிய எழுச்சியை தமிழ்த் தேசியத்திற்கான குரலை நசுக்கி விடமுடியும் என்று ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷவின் அரசு பகல் கனவு காண்கிறது. இதனது விளைவுகள் விபரீதமாக அமையும்.

இத்தகைய கொலைகள் மூலம் பேச்சுவார்த்தைகளிலிருந்து தமிழீழ விடுலைப் புலிகள் தாங்களாகவே விலகிக்கொள்ள வேண்டும். பேச்சுவார்த்தையை விடுதலைப் புலிகள் முறித்து விட வேண்டும்.

அதன்மூலம் அவர்களுக்கு ஒரு அபகீர்த்தியை சர்வதேச சமூகத்தில் ஏற்படுத்தவேண்டும் என்ற கபட நோக்கத் துடன் இக் கொலை நடைபெற்றிருக்கிறது.

இக்கொலை வெறியர்களுக்கு தக்க பாடம் புகட்டுகிற சூழ்நிலை விரைவில் உருவாகும்.

பாராளுமன்றத்தில் கள்ளத்தனமாக கொண்டுவரப்பட்ட அவசரகாலச் சட்டத்தையும் விக்னேஸ்வரன் படுகொலை யையும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினராகிய நாம் பாராளுமன்றத்தில் கண்டித்துள்ளோம் என்றார். (கு)

# கல்விமான்களுக்கும் எமக்கும் இடைவெளி ஏற்படுத்த சில இணையத்தளங்கள் சதி

## யாழ். மாவட்ட அரசியல் துறை கண்டனம்

(கொழும்பு)

யாழ். பல்கலைக்கழக மாணவர் பேரவை உறுப்பினர்கள் தொடர்பாக கடந்த வாரம் இணையத்தளங்கள் சிலவற்றில் வெளியிடப்பட்டிருந்த செய்திகளுக்கு விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியல்துறை கண்டனம் தெரிவித்துள்ளது.

இதுதொடர்பாக யாழ். மாவட்ட அரசியல்துறை விடுத்துள்ள அறிக்கையில் யாழ். பல்கலைக்கழகப் பேரவை உறுப்பினர்கள் தொடர்பாக கடந்த வாரம் இணையத் தளங்கள் சிலவற்றில் அநாகரிகமான முறையில் செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

இச்செயற்பாடு திட்டமிட்டு யாழ். கல்வியியலாளர்களுக்கும் எமக்குமிடையே ஒரு இடைவெளியை ஏற்படுத்தும் நோக்கத்துடனேயே செய்யப்பட்டிருக்கின்றன.

யாழ். பல்கலைக்கழக சமூகம் நீண்ட காலமாக தமிழ்த் தேசியத்திற்காக உழைத்துவருகின்றது இதனை பொறுத்துக்கொள்ள முடியாத அரசும் சில சக்திகளும் அண்மைக் காலமாக யாழ். பல்கலைக்கழகத்தில் சில குழப்பங்களை ஏற்படுத்த முனைந்து வருகின்றன.

இதன் ஒரு கட்டமாகவே மண்டை ஓட்டுடன் கூடிய கல்வியியலாளர்களின் படங்கள் வெளியிடப்பட்டுள்ளன. இதனை ஒரு சதி நடவடிக்கையாக நாம் கருதுகின்றோம். இத்தகைய சம்பவங்களை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இவை தொடர்ந்து நடைபெற அனுமதிக்க முடியாது என்று யாழ். மாவட்ட அரசியல்துறையினர் விடுத்திருக்கும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

# பயிற்சிப் பட்டறை

(சாவகச்சேரி)

தென்மராட்சி பிரதேச கிராம உத்தியோகத்தர்களுக்கான மத்தியஸ்த பயிற்சிப் பட்டறை தென்மராட்சி பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

எதிர்வரும் 19, 20,21 ஆம் திகதிகளில் இப் பயிற்சிப் பட்டறை இடம்பெறும் என பிரதேச செயலர் செ.ஸ்ரீநிவாசன் தெரிவித்துள்ளார். (க-108)

சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்

## ஒன்பதாம் திருவிழா



இராகம்-பிகாக் தாளம்-ஆதி

பல்லவி

சரணம் சரணமையா உன் திருப்பாதாரம்
ஐயப்ப தேவனே நீ எம்முயிர்க்காதாரம்— சரணம்

அனுபல்லவி

புலிமேல் அமர்ந்த ஐயப்பனே சரணம்
கண்ணையூர்ப்பதியுறையும் பெருமானே சரணம்—
சரணம்

சரணம்

புலிப்பால் கேட்ட அரசியாம் அன்னைக்கு
தயங்காது அருளினாயே பெருமானே
கண்ணைப்பதி தாழையடி உறைநாதா
ஐயப்பதேவனே திருவருள் நீ தாதா— சரணம்

ஆக்கம்-ஐயப்ப அடியவன்

## தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



அறுதி உண்மையான பரம்பொருளை அடைய வேண்டுமானால் முதலில் ஒளியை அடைந்தாக வேண்டும். அதற்கு வாழ்க்கையையே வழியாக ஈசாவாஸ்ய உபநிடதம் சொல்கிறது.

# மகிந்த அரசு நடாத்தும் ஒட்டுக் குழு அரசியல்

## விடுதலைப்புலிகள் ஏடு சுட்டிக்காட்டு

ஒட்டுக்குழுக்களின் ஆயுதக் களைவு தொடர்பாக நோர்வே அரசும் - கண்காணிப்புக் குழுவும் மகிந்த அரசை எவ்வளவோ வலியுறுத்தியும் கூட இதுவரை எந்தப் பயனும் ஏற்படவில்லை என விடுதலைப்புலிகளின் ஏட்டின் இத்ழின் பிரதான செய்தியிலேயே இது தெரிவிக்கப்பட்டுள்ளது. அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது;

அந்தளவுக்கு ஒட்டுக்குழு விடயத்தில் மகிந்த அரசு கடும்போக்கு நிலைப்பாட்டுடன் உள்ளது. இந்த ஒட்டுக் குழுக்களை வைத்து கொண்டு எதைச் சாதிக்க முடியும் என்று மகிந்த அரசு எண்ணுகின்றது?

சிங்கள அரசைப் பொறுத்தவரையில் தனது முப்படைகளையும் பயன்படுத்தி போர் மூலம் புலிகள் இயக்கத்தை தோற்க டிக்க முடியும் என்ற இராணுவ நம்பிக்கை யை அது இழந்து விட்டது.

அதனாலேயே ஒட்டுக்குழுக்களைப் பயன்படுத்தி சதி அரசியலை மேற்கொண்டு தமிழரின் விடுதலைப் போராட்டத்தைக் கொச்சைப்படுத்த முடியும் என்று சிங்கள அரசு நம்புகின்றது.

உடன்பட்டபடி ஒட்டுக் குழுக்களின் ஆயுதக் களைவுக்கு மகிந்த அரசு விடாப்பிடியாக மறுத்துவருவதால் ஜெனீவாப் பேச்சுக்கள் தேக்க நிலையை அடைந்துள்ளன. முதற் கட்ட ஜெனீவாப் பேச்சின் பின்னர் ஒட்டுக் குழுக்களுடன் சிங்கள இராணுவமும் இணைந்து வெளிப்படையாகத் தோன்றி கொலைத் தாக்குதல்கள் புரிவதையும் ஆயுத முனையில் மக்களை மிரட்டுவதையும் சர்வதேச சமூகம் அவதானித்தபடிதான் உள்ளது.

போரை நிறுத்திப் பேச்சுவார்த்தை மூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உலக நாடுகள் முற்படும் இந்தவேளையில் ஒட்டுக் குழு அரசியல் மூலம் இலங்கைத் தீவில் இரத்த ஆறு ஓட மகிந்த அரசு வழிவகைகளைச் செய்கின்றது என்ற குற்றஞ்சாட்டே உலக ஊடகங்களில் மேலோங்கியுள்ளது.

ஜிகாத் என்ற பெயரில் ஒட்டுக் குழுவொன்று இராணுவத்தின் துணையுடன் செயற்படுவதாகப் புலிகள் இயக்கம் நிரூபித்திருந்தது. இந்த ஒட்டுக் குழுக்களை வைத்துக் கொண்டு மகிந்த அரசால் புலிகளுடன் போரும் செய்ய முடியாது சமாதானமும் செய்ய முடியாது என்பதை அது புரிந்து கொள்ள வேண்டும்.

அதற்குப் பதிலாக இந்த ஒட்டுக்குழுக்களை ஏவிவிட்டு தமிழர் தாயகத்தில் கொலைகளையும்-வன்முறைகளையுமே மகிந்த அரசால் செய்யமுடியும்.

அரச படைகளால் அல்லது அரச படைகளின் ஆதரவுடன் இயங்கும் ஒட்டுக் குழுக்களால் தமிழ் மக்கள் துன்புறுத்தப்படும் போது அதை வெறுமனவே பார்த்துக் கொண்டு புலிகள் இயக்கம் இருக்க மாட்டாது என அச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது. (ச)

### சிறுப்பிட்டியில்...

பருத்தித்துறை வீதியூடாகச் சென்ற இராணுவ வாகனத்தை இலக்குவைத்து சிறுப்பிட்டி பெற்றோல் நிலையத்திற்கு அருகில் இத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதன்போது அவ்வாகனத்தில் இருந்த சிப்பாய் ஒருவர் படுகாயமடைந்தார். வாகனமும் சேதமடைந்ததாகத் தெரிவிக்கப் பட்டது.

இத் தாக்குதலினையடுத்து அங்கு பெருமளவான இராணுவத்தினர் குவிக்கப்பட்டு தேடுதல் மேற்கொள்ளப்பட்டதுடன் அப்பகுதியில் சென்றபொதுமக்கள் மீது இராணுவத்தினர் கண்மூடித்தனமாகத் தாக்கியுமுள்ளனர்.

இத்தாக்குதலின்போது மூவர் படுகாயமடைந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை கிளைமோர்த் தாக்குதலின் போது காயமடைந்த சுழிபுரத்தைச் சேர்ந்த சம்மந்தப்பிள்ளை சிதம்பரநடராஜா (வயது 59) என்பவர் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இத் தாக்குதலில் காயமடைந்த சிப்பாய பலாலி இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவருவதாகத் தெரிவிக்கப்பட்டது. (ச-4,5)

### விக்னேஸ்வரனின்...

இதேவேளை அவரின் மறைவினையடுத்து நேற்று திருமலை உட்பட வடக்கு ,கிழக்குப்பகுதிகளில் துக்கம் அனுஷ்டிக்கப்பட்டது.

இச் சம்பவம் தொடர்பாக கொழும்பில் இருந்து திருமலை சென்ற விசேட பொலிஸ் குழுவினர் இதுதொடர்பான விசாரணைகளை மேற்கொண்டுவருகின்றனர். (ச-4)

### இணைத்...

யப்பான் ஆகிய நாடுகளின் தூதுவர்களே கிளிநொச்சி செல்கின்றனர். தற்போதைய அரசியல் சூழல்கள், ஜெனீவா உடன்பாடு அமுலாக்கம் தொடர்பாக இச் சந்திப்பின்போது விவாதிக்கப்படவுள்ளது. (ச-4)

### ரணில்...

வேண்டும் என்று நோர்வே மற்றும் இந்திய அரசுகள் அழுத்தம் கொடுத்து வரும் நிலையில் இச் சந்திப்பு நடைபெறவுள்ளது. சமாதான முயற்சிகளை வலுவாக முன்னெடுக்க தாம் யோசனை கொண்டிருப்பதால் ஜே.வி.பியை விடுத்து பிரதான எதிர்க் கட்சியான ஐக்கிய தேசியக் கட்சியின் ஒத்துழைப்பை தாம் பெறவிருப்பதாக எரிக்சொல் ஹெய்மிடம் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இதையடுத்து ராஜபக்ஷவுக்கும் ரணில் விக்கிரமசிங்கவுக்கும் இடையில் முக்கிய பேச்சுவார்த்தைகள் விரைவில் நடைபெறக் கூடும் என்று கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (ச)

# சட்டநாதர் வீதியில் ஆறு வீடுகளில் நேற்று அதிகாலை துணிகரத் திருட்டு

## இரு திருடர்கள் பொலிஸாரால் கைது

(யாழ்ப்பாணம்)

நல்லூர் சட்டநாதர் வீதியிலும் அதனை அண்மித்த பூதவராயர் வீதியிலும் பத்திற்கும் மேற்பட்ட திருடர் குழுவொன்றினால் ஆறு வீடுகளில் திருட்டு மேற்கொள்ளப்பட்டுள்ளது.

நேற்று அதிகாலை 2.30மணிக்கு நடைபெற்ற இத் திருட்டுச் சம்பவங்களில் திருடர்களுக்கும் வீட்டுக்காரர்களுக்குமிடையில் இடம்பெற்ற மோதலில் சட்டநாதர் வீதியைச் சேர்ந்த இருவர் வாள் வெட்டுக்கு இலக்காகி யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

திருட்டு இடம்பெற்ற வீட்டிற்கு முன்னால் ஹயஸ் வாகனம் ஒன்று வந்து நின்றதாகவும் அதில் ஆறு பேர் லேசர் கருவிகளுடன் கண்ணாடி யன்னல்களை அடித்து உடைத்து உட்புகுந்து வீட்டு உரிமையாளர்களிடம் பணத்தைக் கேட்டதாகவும் அவர் அதற்கு மறுத்ததனால் வாள்களினால் அவர்கள் இருவரையும் வெட்டிக் காயப்படுத்திவிட்டு மேலும் இருவரை கதிரையில் இருக்குமாறு கூறிவிட்டு அவர்களிடம் இருந்த நகைகளைப் பறிமுதல் செய்து தப்பிச் சென்றதாகவும் தெரியவருகின்றது.

இதேவேளை சம்பவம் தொடர்பாக பொலிஸாருக்கு அறிவித்ததையடுத்து அவ்விடத்திற்குச் சென்ற பொலிஸார் திருடர்களைத் துரத்திச் சென்று இருவரைப் பிடித்தனர்.

இவ்விருவரிடமிருந்து ஐந்து துவிச்சக்கர வண்டிகளையும் மூன்று வாள்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். கைது செய்யப்பட்ட இரு திருடர்களையும் யாழ்ப்பாணப் பொலிஸார் நீதிவான் முன்னிலையில் ஆஜர்படுத்தினர்.

அவர்களை விசாரணைக்காகத் தடுத்து வைத்துமாறு நீதிவான் உத்தரவிட்டார். சட்டநாதர் வீதியில் இடம்பெற்ற திருட்டைத் தொடர்ந்து முத்திரைச் சந்தியில் அமைந்துள்ள வீடியோக் கடை ஒன்றிலும் திருடர்கள் தமது கைவரிசையைக்காட்டியுள்ளனர். (ச-5,132)

### விக்னேஸ்வரனுக்கு...

ஒருபுறமும் ஆக்கிரமிப்பு இராணுவத் தின் அடாவடித்தனங்கள் மறுபுறமுமாகத் தினந்தினம் எத்தனையோ நெருக்குதல்களையும் சோதனைகளையும் அச்சுறுத்தல்களையும் சந்தித்து நின்றபோதும் அஞ்சா நெஞ்சுடனும் அபாரமான துணிச்சலுடனும் அநீதியை எதிர்த்துப் போரிட்டார்.

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவராகவிருந்து அந்த மாவட்டத்தில் தமிழ்த் தேசியக் கட்டமைப்பு இறுக்கம் பெற்று, பலம் பெற்றுவளர அயராது உழைத் தார். அவரது பெரும் பணி என்றும் பாராட்டுக்குரியது. வ . விக்னேஸ்வரன் அவர்களின் இனப்பற்றிற்கும் விடுதலைப் பற்றிற்கும் மதிப்ப ளித்து அவரது விடுதலைப் பணியை கெளரவிக்கும்முக மாக மாமனிதர் என்ற அதியுயர் தேசிய விருதை அவருக்கு வழங்குவதில் நான் பெருமையடைகின்றேன்.

சத்திய இலட்சியத்திற்காக வாழ்ந்த உயர்ந்த மனிதர்களை சாவு என்றும் அழித்து விடுவதில்லை. சுதந்திர நாயகர்களாக எமது தேசத்தின் ஆன்மாவில் அவர்கள் என்றும் வாழ்வார்கள் என உள்ளது. (ச)


## சீனிக் கப்பல்
### பருத்தித்துறை துறைமுகம் வருகின்றது

இந்தியாவில் இருந்து இறக்குமதி செய்யப்பட்ட சீனி பருத்தித்துறை துறைமுகத்திற்கு வருகின்றது. தேவையானோர் கீழ்க் காணும் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

தொடர்புகளுக்கு...

ஈஸ்வரபகவான் அன் கம்பனி
இல.91/1 ஸ்ரான்லி வீதி
யாழ்ப்பாணம்.

தொலை பேசி இலக்கம்:- 222 2350
222 7603

(C-அ-286)


# மக்கள் குடியிருப்புக்கள் நோக்கி இராணுவம் ஆட்லறித் தாக்குதல்

## ஒருவர் படுகாயம்

(திருகோணமலை)

திருகோணமலை மூதூர் கிழக்குப் பிரதேச பகுதிகளை நோக்கி இராணுவத்தினர் நேற்று நடத்திய தாக்குதலில் பொதுமகன் ஒருவர் படுகாயமடைந்தார்.

பல வீடுகள் சேதமடைந்தன. மூதூர் கிழக்கிலுள்ள கணேசபுரம் நோக்கி கட்டைப்பறிச்சான் இராணுவ முகாமிலிருந்து காலை 8.30 மணியளவில் ஆட்லறித் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டது.

இதில் பல வீடுகள் சேதமடைந்தன. மூதூர் கிழக்கில் உள்ள கடற்கரைச் சேனையில் வீட்டிற்கு வெளியே நின்றிருந்த செல்லத்தம்பி பாலசுப்பிரமணியம் (வயது-52) என்பவர் இத் தாக்குதலில் படுகாயமடைந்தார்.

இராணுவத் தாக்குதல் தொடர்பாக இலங்கைப் போர்நிறுத்தக் கண்காணிப்புக் குழுவிடம் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் முறைப்பாடு செய்துள்ளார். (ச-4)

### திருகோணமலை...

மோதல் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டது. இத் தாக்குதல் சம்பவம் தொடர்பாக இரு தரப்பினராலும் போர் நிறுத்தக் கண்காணிப்புக்குழுவில் முறையிடப்பட்டுள்ளது. (ச-4,5)







இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 09.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.